ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1838/8 - 2013 නොවැම්බර් මස 26 වැනි අඟහරුවාදා - 2013.11.26

*1838/8 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 26 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டம்**

அறிவித்தல்

இரட்டை வரி விதிப்பைத் தவிர்ப்பதற்காகவும், வருமான வரிகளை செலுத்தாது தட்டிக் கழிப்பதனை தடுக்கும் வகையிலும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் பலஸ்தீன் அரசாங்கத்திற்கும் இடையில் 2012.04.16 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட, இங்கு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இரு தரப்பு ஒப்பந்தத்திற்கு 2013.10.23 ஆந் திகதி நிறைவேற்றப்பட்ட பிரேரணையின் படி பாராளுமன்றத்தின் அங்கீகாரம் கிடைத்துள்ளது என்பதனை 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 97(1) (ஆ) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

பீ. பி. ஜயசுந்தர,
செயலாளர்,
நிதி, திட்டமிடல் அமைச்சு.

நிதி, திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு 01,
2013.11.26

**அட்டவணை**

வருமானம் மீதான வரிகள் தொடர்பில் இரட்டை வரிவிதிப்பைத் தவிர்ப்பதற்காகவும் வரி செலுத்தாது தட்டிக் கழிப்பதனைத் தடுப்பதற்குமாகவும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் பலஸ்தீன் அரசாங்கத்திற்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கமும் (இதனகத்துப் பின்னர் இலங்கை என அழைக்கப்படும்) பலஸ்தீன அரசாங்கமும் (இதனகத்துப் பின்னர் பலஸ்தீன் என அழைக்கப்படும்) வருமானம் மீதான வரிகள் தொடர்பில் இரட்டைவரிவிதிப்பைத் தவிர்ப்பதற்காகவும் வரி செலுத்தாது தட்டிக் கழிப்பதனைத் தடுப்பதற்காகவும் ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்திக் கொள்ளும் நோக்கில் கீழே காட்டப்பட்டுள்ளவாறு உடன்பாடு கண்டுள்ளன.

**உறுப்புரை 1**

உள்ளடக்கப்படும் ஆட்கள்

ஒப்பந்த அரசுகளில் ஒன்றின் அல்லது இரண்டினதும் வதியுநரான ஆட்களின் மீது இந்த ஒப்பந்தம் ஏற்புடையதாகுதல் வேண்டும்.

**உறுப்புரை 2**

உள்ளடக்கப்படும் வரிகள்

1. ஒப்பந்த அரசு ஒன்றின் சார்பில் விதிப்பனவு செய்யப்படும் வருமானம் மீதான வரிகள் தொடர்பில், அவை அறவிடப்படும் முறைகளைக் கவனத்தில் எடுக்காது, இந்த ஒப்பந்தம் ஏற்புடையதாகுதல் வேண்டும்.

*2.* மொத்த வருமானத்தின் மீது அல்லது அதன் ஒரு பகுதியின் மீது விதிப்பனவு செய்யப்படும் அனைத்து வரிகளும் வருமானத்தின் மீதான வரிகளாகக் கருதப்படுதல் வேண்டும்.

*3.* இந்த ஒப்பந்தம் தற்போது நடைமுறையிலுள்ள பின்வரும் வரிகள் மீது ஏற்புடையதாகும்:

(அ) இலங்கையில்,
(i) முதலீட்டுச் சபையில் பதிவுசெய்யப்பட்ட தொழில் முயற்சிகளின் புரள்வின் அடிப்படையிலான வருமானவரி உள்ளிட்ட வருமான வரி (இதனகத்துப் பின்னர் "இலங்கை வரி" என்று அழைக்கப்படும்)

(ஆ) பலஸ்தீன அரசில்,
(i) வருமான வரி (இதனகத்துப் பின்னர் "பலஸ்தீன வரி" என்று அழைக்கப்படும்)

*4.* தற்போது நடைமுறையிலுள்ள வரிகளுக்கு மேலதிகமாக அல்லது அவற்றுக்குப் பதிலாக இவ் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட திகதியின் பின்னர் வருமானத்தின் மீது விதிப்பனவு செய்யப்படும் அதற்குச் சமனான அல்லது பெருமளவில் சமனான வேறு ஏதேனும் வரிகள் தொடர்பிலும் இந்த ஒப்பந்தம் ஏற்புடையதாகுதல் வேண்டும். ஒப்பந்த அரசுகளின் தகவுடைய அதிகாரிகள் தங்களது வரிவிதிப்பனவுச் சட்டங்கள் தொடர்பில் செய்யப்பட்டுள்ள முக்கிய மாற்றங்கள் தொடர்பில் தங்களுக்குள் ஒருவருக்கு ஒருவர் அறியச் செய்து கொள்ளல் வேண்டும்.

***உறுப்புரை 3***

பொது வரைவிலக்கணங்கள்

*1.* இவ் ஒப்பந்த நோக்கங்களுக்காக, சொல்லமைவின் படி வேறு விதமான கருத்து தேவைப்பட்டாலன்றி, :-

(அ) (I) "இலங்கை" என்ற சொல் சர்வதேச சட்டத்திற்கும் அதன் தேசிய அரசியலமைப்புக்களுக்கும் இணங்க, இலங்கை தனது இறைமை உரிமைகளையும் நீதிமன்ற நியாயாதிக்கத்தையும் அமுல்படுத்துகின்ற அல்லது இதற்குப் பிறகு அமுல்படுத்தும் சாத்தியமுள்ள அதன் நிலப் பிரதேசம், உள்ளக நீர் நிலைகள், அரசுக்குச் சொந்தமான கடற் பிரதேசம், அதற்கு மேல் அமைந்துள்ள வான்வெளி என்பனவும் பிரத்தியேக பொருளாதார வலயம், கண்டமேடை என்பனவும் உள்ளிட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்குச் சொந்தமான எல்லைகளைக் குறிக்கும் ;
(II) "பலஸ்தீன்" என்ற சொல் பலஸ்தீன இராச்சியத்தைக் குறிக்கும் அதேவேளை, புவியியல் ரீதியில் நோக்குமிடத்து "பலஸ்தீன்" என்ற சொல், அதன் கடற்பிரதேசம், கடல் அடித்தளம், கரையோர கடற்பிரதேசங்களின் நிலக்கீழ் மண் மற்றும் சர்வதேச சட்டங்களுக்கும் ஒப்பந்தங்களுக்கும் இணங்க, இயற்கை வளங்களை அல்லது மேற்குறிப்பிட்ட பிரதேசங்களை ஆய்வு செய்வதற்கு பலஸ்தீன் தனது இறைமை உரிமைகளைப் பிரயோகிக்கக் கூடிய உள்நாட்டு கடல் எல்லைகளுக்கு வெளியில் அமைந்துள்ள பிரதேசங்களையும் குறிக்கும்;

(ஆ) "ஒப்பந்த அரசு" மற்றும் "மற்றைய ஒப்பந்த அரசு" என்ற வாசகங்கள் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு "பலஸ்தீன" அரசை அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசைக் குறிக்கும்;

(இ) "ஆள்" - என்ற சொல் தனியாள் ஒருவரை, கம்பனியொன்றை, ஆட்களின் சபையொன்றைக் குறிக்கும்;

(ஈ) "கம்பனி" என்ற சொல் கூட்டிணைக்கப்பட்ட சபை ஒன்றை அல்லது வரி நோக்கங்களுக்காக ஒரு கூட்டிணைக்கப்பட்ட சபையாகக் கருதப்படுகின்ற தாபனம் ஒன்றைக் குறிக்கும் ;

(உ) "ஒப்பந்த அரசு ஒன்றின் தொழில் முயற்சி" மற்றும் "மற்றைய ஒப்பந்த அரசின் தொழில் முயற்சி" என்ற வாசகங்கள் முறையே ஒப்பந்த அரசு ஒன்றில் வதியும் ஒருவரினால் கொண்டு நடாத்தப்படுகின்ற தொழில் முயற்சியையும் மற்றைய ஒப்பந்த அரசில் வதியும் ஒருவரினால் கொண்டு நடாத்தப்படுகின்ற தொழில் முயற்சியையும் குறிக்கும் ;

(ஊ) "சர்வதேச போக்குவரத்து" என்ற சொல் ஒப்பந்த அரசு ஒன்றில் அமைந்துள்ள தொழில் முயற்சி ஒன்றினால் இயக்கப்படுகின்ற கப்பல் அல்லது விமானம் ஒன்றின் மூலம், அக்கப்பல் அல்லது அவ் விமானம் மற்றைய ஒப்பந்த அரசின் நிலையங்களுக்கு இடையில் மாத்திரம் நடாத்துகின்ற சந்தர்ப்பங்கள் தவிர்ந்த எந்தவொரு போக்குவரத்தையும் குறிக்கும் ;

(எ) "நாட்டினத்தவர்" என்ற சொல் -

(i) ஒப்பந்த அரசு ஒன்றின் பிரசாவுரிமை பெற்றுள்ள ஆள் ஒருவரையும்;

(ii) ஒப்பந்த அரசு ஒன்றில் நடைமுறையிலுள்ள சட்டத்தின் ஊடாக குறித்த சட்ட அந்தஸ்தினை பெறுகின்ற சட்டரீதியான ஆள் ஒருவரை அல்லது பங்குடமை வியாபாரம் ஒன்றை அல்லது கம்பனி ஒன்றையும் குறிக்கும்.

(ஏ) "தகவுடைய அதிகாரி" என்ற வாசகம்:-

(i) இலங்கையின் விடயத்தில் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தையும் அல்லது அவரது அதிகாரம் பெற்ற முகவரையும்

(ii) பலஸ்தீன் தொடர்பில் அதன் நிதி அமைச்சரை அல்லது அவரது அதிகாரம் வழங்கப்பெற்ற முகவரையும் குறிக்கும்.

(ஐ) "வரி" என்ற சொல் தேவைக்கு ஏற்றவாறு இலங்கை வரியை அல்லது பலஸ்தீன வரியைக் குறிக்கும். எவ்வாறாயினும் இவ் ஒப்பந்தம் ஏற்புடையதாகும் வரிகள் தொடர்பில் செலுத்தாது தட்டிக் கழித்தவைகள் அல்லது கைவிட்டவைகள் தொடர்பில் செலுத்த வேண்டிய ஏதேனும் ஒரு தொகையை அல்லது இவ்வரிகளுடன் தொடர்புடைய வகையில் விதிக்கப்படும் ஏதேனும் தண்டனைகளைப் பிரதிநிதித்துவம் செய்யும் தொகைகள் இதில் உள்ளடங்கமாட்டா.

2. ஒப்பந்த அரசு ஒன்று ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் இந்த ஒப்பந்தத்தினை ஏற்படையதாக்குகையில், இதில் வரைவிலக்கணம் கூறப்படாத ஏதேனும் ஒரு சொல்லை, அதன் சொல்லமைவின் படி வேறு விதமாக பொருள் கொள்ள வேண்டிய அவசியம் இருந்தாலேயன்றி, இந்த ஒப்பந்தத்துடன் தொடர்புடைய வரி நோக்கங்களுக்காக அந்த அரசின் சட்டத்தின் கீழ் அச்சந்தர்ப்பத்தில் கொண்டுள்ள கருத்தையே கொள்ளுதல் வேண்டும். அத்துடன் அவ் அரசில் நடைமுறையிலுள்ள வரிச் சட்டங்களின் கீழ் அச்சொல் கொண்டுள்ள கருத்தை விட விஞ்சி ஏற்புடையதாகுதல் வேண்டும்.

**உறுப்புரை 4**

வதிபவர்

1. இந்த ஒப்பந்த நோக்கங்களுக்காக "ஒப்பந்த அரசில் வதிபவர்" என்ற வாசகம் அவ் அரசின் சட்டத்தின் கீழ் எவரேனும் ஆளொருவரின் நிரந்தர வதிவு, வதிவிடம், முகாமை நிலையம், சட்டரீதியான நிலையம், அல்லது அத்தகைய தன்மையைக் கொண்ட வேறு ஏதேனும் அளவுகோள்களின் காரணமாக அவ் அரசு அடங்கலாக அந் நாட்டின் சட்டத்தின் கீழ் வரி செலுத்த வேண்டிய ஒரு நபரைக் குறிப்பதுடன் அவ் அரசும் அதன் ஏதேனும் அரசியல் உப பிரிவும் அல்லது உள்ளூர் அதிகாரசபையும் அதில் அடங்கும். அவ் அரசின் வரி விதிக்கப்படும் எவரேனும் நபரை இவ் வாசகம் குறிக்கமாட்டாது.

2. 1 ஆம் பந்தியின் ஏற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு எவரேனும் ஆளொருவர் ஒப்பந்த அரசுகள் இரண்டிலும் வதிபவராக இருக்குமிடத்து, அவரின் நிலை தொடர்பில் கீழே உள்ளவாறு தீர்மானித்தல் வேண்டும்.

(அ) அவருக்கு நிரந்தர வதிவிடம் உள்ள அரசில் மாத்திரம் அவர் வதிபவராகக் கருதப்படுவார். மேலும் அவருக்கு இரு அரசுகளிலும் நிரந்தர வசிப்பிடம் காணப்படுமாயின், அவருக்கு மிகவும் நெருக்கமான தனிப்பட்ட மற்றும் பொருளாதாரத் தொடர்புகள் காணப்படுகின்ற (அவரது மிக முக்கியமான தொடர்புகளின் மத்திய நிலையமாகவுள்ள) அரசில் மாத்திரம் அவர் வதிபவராகக் கருதப்படுதல் வேண்டும் ;

(ஆ) அவரது மிகவும் முக்கியமான தொடர்புகளின் மத்திய நிலையமாகவுள்ள அரசினைத் தீர்மானிக்க முடியாதவிடத்து, அல்லது ஒரு அரசிலேனும் அவருக்கு நிரந்தர வதிவிடம் எதுவும் காணப்படாதவிடத்து, அவர் வழமையாக வதியும் வதிவிடமுள்ள அரசில் மாத்திரம் அவர் வதிபவராகக் கருதப்படுதல் வேண்டும் ;

(இ) அவருக்கு இரண்டு அரசுகளிலும் வழமையாக வதியும் வதிவிடங்கள் காணப்படுமிடத்து அல்லது ஒன்றிலேனும் அவ்வாறான ஒன்று காணப்படாதவிடத்து, அவர் நாட்டினத்தவராகவுள்ள அரசில் மாத்திரம் அவர் வதிபவராகக் கருதுதல் வேண்டும் ;

(ஈ) அவர் இரு அரசுகளிலும் நாட்டினத்தவராக இருப்பின் அல்லது அவற்றில் ஒன்றிலேனும் நாட்டினத்தவராக இல்லாதவிடத்து, இவ்விடயத்தை ஒப்பந்த அரசுகளின் தகவுடைய அதிகாரிகள் பரஸ்பர உடன்பாட்டின் மூலம் தீர்மானித்துக் கொள்ளல் வேண்டும்.

3. 1ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் காரணமாக தனியாளொருவர் அல்லாத ஆளொருவர் ஒப்பந்த அரசுகள் இரண்டிலும் வதிபவராக இருப்பின், அதன் செயற்பாட்டு முகாமை நிலையம் அமைந்துள்ள அரசில் மாத்திரமே வதிபவராகக் கருதுதல் வேண்டும்.

**உறுப்புரை 5**

நிரந்தரத் தாபனம்

1. இவ்வொப்பந்தத்தின் நோக்கங்களுக்காக "நிரந்தரத் தாபனம்" என்னும் சொல், தொழில் முயற்சியொன்றின் வியாபாரச் செயற்பாடுகள் முழுமையாக அல்லது பகுதியாகக் கொண்டு நடாத்தப்படும் நிலையான வியாபார நிலையத்தைக் குறிக்கும்.

2. "நிரந்தரத்தாபனம்" என்னும் சொல் குறிப்பாகப் பின்வருவனவற்றையும் உள்ளடக்கும் -

(அ) முகாமை நிலையம் ;

(ஆ) கிளை ;

(இ) அலுவலகம் ;

(ஈ) தொழிற்சாலை ;

(உ) வேலைத்தளம்;

(ஊ) சுரங்கங்கள், எண்ணெய் அல்லது வாயுக் கிணறுகள், கற்குழிகள் அல்லது இயற்கை வளத்தை மாற்றீடு செய்யும் வேறு ஏதேனும் இடங்கள்;

(எ) பிறருக்கு களஞ்சிய வசதிகளை வழங்கும் ஆளொருவருக்குச் சொந்தமான களஞ்சியசாலைகள்;

(ஏ) பண்ணை, பெருந்தோட்ட, விவசாயப் பயிர்ச்செய்கைகள் அல்லது அவற்றுடன் தொடர்புடைய செயற்பாடுகளைக் கொண்டு நடாத்துகின்ற நிலையங்கள்;

(ஐ) விற்பனை விநியோக நிலையமாக அல்லது கட்டளைகள் கோருகின்ற அல்லது பெறுகின்ற நிலையமாகப் பயன்படுத்தப்படும் இடங்கள்.

3. "நிரந்தரத் தாபனம்" என்னும் சொல் பின்வருவனற்றையும் உள்ளடக்கும் -

(அ) கட்டட வேலைத்தளங்கள், நிர்மாணங்கள், ஒன்றுசேர்க்கும் அல்லது பொருத்தும் செயற்திட்டங்கள், இயற்கை வளங்களைக் கண்டுபிடித்தல் அல்லது அபிவிருத்தி செய்தலுக்காகப் பயன்படுத்தப்படும் தோண்டும் மேடைகள் அல்லது கப்பல்கள், அவற்றுடன் தொடர்புடைய மேற்பார்வைச் செயற்பாடுகள் அடங்கலாக, எனினும் அவ்வேலைத்தளம் அல்லது செயற்திட்டம் அல்லது அதன் செயற்பாடுகள் 12 மாத காலப்பகுதியினுள் ஆறு மாதங்களுக்கு மேற்பட்ட காலம் தொடருமாயின் மாத்திரம்.

(ஆ) ஒரு தொழில் முயற்சி, மேற்படி நோக்கங்களுக்காக ஊழியர்களை அல்லது வேறு ஆளணியினரைப் பயன்படுத்தி ஆலோசனைச் சேவைகள் அடங்கலாக சேவைகளை வழங்குதல், எனினும் அத்தகைய தன்மையைக் கொண்ட செயற்பாடுகள் நாட்டின் உள்ளே உரிய நிதியாண்டு ஆரம்பிக்கும் அல்லது பூர்த்தியடையும் ஏதேனும் பன்னிரண்டு மாத கால எல்லையினுள் 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியில் அல்லது காலப்பகுதிகளில் தொடருமாயின் மாத்திரம்.

4. இவ்வுறுப்புரையின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளைப் பொருட்படுத்தாது "நிரந்தரத் தாபனம்" எனும் சொல் பின்வருவனவற்றை உள்ளடக்கமாட்டாது என்பதனைக் கவனத்தில் எடுத்தல் வேண்டும்.

(அ) தொழில் முயற்சியொன்றுக்குரிய பொருட்களை அல்லது வணிகப் பொருட்களைக் களஞ்சியப்படுத்தும் அல்லது காட்சிப்படுத்தும் நோக்கத்திற்காக மட்டும் வசதிகளைப் பயன்படுத்தல் ;

(ஆ) களஞ்சியப்படுத்துதல், காட்சிப்படுத்துதல் நோக்கத்திற்காக மாத்திரம் தொழில் முயற்சி ஒன்றுக்குச் சொந்தமான பொருட்களின் அல்லது வணிகப் பொருட்களின் கையிருப்பு ஒன்றினைப் பேணுதல் ;

(இ) வேறொரு தொழில் முயற்சியின் தயாரிப்பு நோக்கத்திற்காக மாத்திரம் தொழில் முயற்சியொன்றுக்குரிய பொருட்களின் அல்லது வணிகப் பொருட்களின் கையிருப்பு ஒன்றினைப் பேணுதல்.

(ஈ) தொழில் முயற்சிக்கான பொருட்களை அல்லது வணிகப் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக அல்லது தகவல்களைச் சேகரிப்பதற்காக மாத்திரம் நிலையான வியாபார நிலையமொன்றை நடாத்துதல்.

(உ) தொழில் முயற்சி ஒன்றிற்காக பூர்வாங்கமான அல்லது துணைத் தன்மையினைக் கொண்ட வேறு ஏதேனும் செயற்பாட்டை மேற்கொள்ளும் நோக்கத்திற்காக மாத்திரம் நிலையான வியாபார நிலையம் ஒன்றை நடாத்துதல்.

(ஊ) இப்பந்தியின் (அ) முதல் (உ) வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள எவ்வகையான செயற்பாடுகளினதும் கூட்டான செயற்பாடு ஒன்றைக் கொண்டு நடாத்துவதற்காக மாத்திரம் நிரந்தரத்தாபனமொன்றைக் கொண்டு நடாத்தும் போது அச்செயற்பாடுகளின் கூட்டு பூர்வாங்கமான அல்லது துணையான தன்மையினைப் பெறுதல்.

5. 1 ஆம் 2 ஆம் பந்திகளின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், 7 ஆம் பந்தி ஏற்புடையதாகும் சுதந்திர நிலையிலுள்ள முகவரொருவரைத் தவிர எவரேனும் ஆளொருவர் ஒப்பந்த அரசு ஒன்றில் மற்றைய ஒப்பந்த அரசின் தொழில் முயற்சியொன்றுக்காகச் செயற்படுகின்ற சந்தர்ப்பத்தில்,

(அ) அவ் ஆளின் செயற்பாடுகள் 4 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளுக்குள் வரையறுக்கப்பட்டதாகவும், அந் நிரந்தரத் தாபனம் ஒன்றின் ஊடாக மேற்கொள்ளப்படுமாயின் வியாபார நிலையம் அப்பந்தியின் ஏற்பாடுகளின் கீழ் நிரந்தரத் தாபனம் ஒன்றாக கருதப்படாததுமான செயற்பாடாக இருந்தாலேயன்றி, தொழில் முயற்சியின் சார்பில் ஒப்பந்தங்களைச் செய்வதற்கு அதிகாரம் பெற்ற, அவ் ஒப்பந்த அரசில் அவ் அதிகாரத்தை ஒரு வழக்கமாக செயற்படுத்தக்கூடிய ஆளொருவராக, அல்லது

(ஆ) அவ்வாறான அதிகாரம் இல்லாதவிடத்தும், முதலில் குறிப்பிட்ட அரசில் வழக்கமான முறையில் கொண்டு நடாத்துகின்ற அத்தொழில் முயற்சிக்குச் சொந்தமான பொருட்கள் அல்லது வணிகப்பொருள் கையிருப்பு ஒன்றின் மூலம் தொழில் முயற்சியின் சார்பில் பொருட்கள் அல்லது வணிகப் பொருட்களை விநியோகிக்கின்ற ஆளொருவராக;

இருப்பாராயின், அவ் ஆள் தொழில்முயற்சியின் சார்பில் மேற்கொள்ளும் ஏதேனும் செயற்பாடுகள் தொடர்பில் அத்தொழில் முயற்சிக்கு முதலில் குறிப்பிட்ட ஒப்பந்த அரசில் நிரந்தரத் தாபனம் ஒன்று காணப்படுவதாகக் கருதுதல் வேண்டும்.

6. மறு காப்புறுதி தொடர்பில் அன்றி, ஒப்பந்த அரசு ஒன்றின் காப்புறுதித் தொழில் முயற்சியொன்று 7 ஆம் பந்தி ஏற்புடையதாகும் சுதந்திர நிலையிலுள்ள பிரதிநிதி ஒருவரைத் தவிர வேறு ஆளொருவர் மற்றைய ஒப்பந்த அரசின் நிலப் பிரதேசத்தினுள் தவணைப் பணம் சேகரிப்பாராயின் அல்லது அந்நிலப் பிரதேசத்தினுள் காணப்படும் இழப்பபாயங்களைக் காப்புறுதி செய்யுமாயின், இவ் உறுப்புரையின் முன் ஏற்பாடுகளைக் கவனத்திற் கொள்ளாது அதற்கு மற்றைய ஒப்பந்த அரசில் நிரந்தர தாபனம் ஒன்று உள்ளது என்று கருதுதல் வேண்டும்.

7. மேற்குறித்த சாதாரண நடைமுறைகளுக்கு இணங்கச் செயற்படும் தரகர் ஒருவர், சாதாரண தரகுப்பண முகவர் அல்லது சுயாதீன நிலையைக் கொண்ட எவரேனும் முகவர் ஒருவரின் ஊடாக ஒப்பந்த அரசு ஒன்றில் வியாபாரச் செயற்பாடுகளை மேற்கொள்கின்ற காரணத்தினால் மாத்திரம் அவ் அரசினுள் மற்றைய ஒப்பந்த அரசின் நிரந்தரத் தாபனம் ஒன்று காணப்படுவதாகக் கருதக் கூடாது. எவ்வாறாயினும் அத்தகைய முகவர் ஒருவரின் செயற்பாடுகள் அத்தொழில்முயற்சியின் சார்பில் முழுமையாக அல்லது பிரதானமாக அர்ப்பணிப்புடன் மேற்கொள்ளப்படுகின்ற போது முகவருக்கும் தொழில்முயற்சிக்கும் இடையிலான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்புகளற்ற ஆட்கள் மத்தியில் நடைபெறும் முறையிலான நிபந்தனைகளின் கீழ் மேற்கொள்ளப்படுவதில்லை என்று கூறப்பட்டிருப்பின், இப்பந்தியின் கருத்தின்படி அவர் சுதந்திர நிலையிலுள்ள ஒரு முகவராகக் கருதப்படக் கூடாது.

8. ஒப்பந்த அரசு ஒன்றில் வதியும் கம்பனியொன்று மற்றைய ஒப்பந்த அரசில் வதியும் கம்பனியொன்றை நிர்வகித்தல் அல்லது அத்தகைய கம்பனியொன்றினால் நிர்வகிக்கப்படுதல் (நிரந்தரத் தாபனம் ஒன்றின் ஊடாக அல்லது வேறு ஏதேனும் முறையில்) அல்லது மற்றைய ஒப்பந்த அரசில் வியாபாரத்தை மேற்கொள்வதனால் மாத்திரம் ஒரு கம்பனி மற்றையதன் நிரந்தர தாபனமாக அமைய மாட்டாது.

***உறுப்புரை 6***

அசையா ஆதனங்களிலிருந்து கிடைக்கும் வருமானம்

1. ஒப்பந்த அரசு ஒன்றில் வதிபவர் ஒருவருக்கு மற்றைய ஒப்பந்த அரசில் அமைந்துள்ள (விவசாயம் மூலம் அல்லது பயிச்செய்கையின் மூலம் கிடைக்கும் வருமானம் அடங்கலாக) அசையா ஆதனங்களில் இருந்து கிடைக்கும் வருமானத்தின் மீது மற்றைய ஒப்பந்த அரசில் வரிவிதிக்கப்பட முடியும்.

2. "அசையா ஆதனங்கள்" என்ற வாசகம், சர்ச்சைக்குரிய ஆதனம் அமைந்துள்ள அரசின் சட்டத்தின் கீழ் அவ்வாசகம் கொண்டுள்ள கருத்திலேயே காணப்படுதல் வேண்டும். எத்தகைய சந்தர்ப்பத்திலும் இவ் வாசகத்தில் உள்ள அசையா ஆதனங்களில் அடங்கும் ஆதனங்கள், கால்நடைகள் மற்றும் விவசாயத்தின் போதும் காடாக்கத்தின் போதும் பயன்படுத்தும் உபகரணங்கள், காணிகள் சொத்துக்கள் தொடர்பில் சாதாரண சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகும் உரிமைகள், அசையா ஆதனங்களின் ஆட்சியுரிமை, கனிப்பொருட் படிமங்கள், மூலங்கள் மற்றும் ஏனைய இயற்கை வளங்கள் தொடர்பில் வேலை செய்வதற்கு அல்லது வேலை செய்வதற்கான உரிமைக்கான மாற்றமடையக் கூடிய அல்லது நிலையான கொடுப்பனவைப் பெறுவதற்கான உரிமை என்பன உள்ளடக்கப்படுதல் வேண்டும். அத்துடன் கப்பல்கள், விமானங்கள் என்பன அசையா ஆதனங்களாகக் கருதப்படக் கூடாது.

3. அசையா ஆதனங்களை நேரடியாகப் பயன்படுத்துதல், வாடகைக்கு விடுதல், அல்லது வேறு ஏதேனும் ஒரு முறையில் பயன்படுத்துதல் என்பவற்றின் மூலம் கிடைக்கும் வருமானங்களுக்கும், இவ் உறுப்புரையின் 1 ஆம் பந்தியின் ஏற்பாடுகள், ஏற்புடையதாகுதல் வேண்டும்.

4. 1 ஆம், 3 ஆம் பந்திகளின் ஏற்பாடுகள், ஏதேனும் ஒரு தொழில் முயற்சியின் அசையா ஆதனங்களிலிருந்து கிடைக்கும் வருமானங்களுக்கும், சுதந்திர தனிப்பட்ட தேவைகளை மேற்கொள்வதற்குப் பயன்படுத்தும் அசையா ஆனத்திலிருந்து கிடைக்கும் வருமானங்களுக்கும் ஏற்புடையதாகுதல் வேண்டும்.

***உறுப்புரை 7***

தொழில் இலாபங்கள்

1. ஒப்பந்த அரசு ஒன்றின் தொழில் முயற்சியொன்று மற்றைய ஒப்பந்த அரசில் அமைந்துள்ள நிரந்தரத்தாபனம் ஒன்றின் ஊடாக மற்றைய ஒப்பந்த அரசில் வியாபாரச் செயற்பாடுகளை மேற்கொள்ளவதாயின் மாத்திரமே அவ் ஒப்பந்த அரசினால் அத்தொழில் முயற்சியின் இலாபங்கள் மீது வரி விதிப்புச் செய்ய முடியும். தொழில் முயற்சியை மேலே குறிப்பிட்டுள்ளவாறு மேற்கொள்வதாயின் தொழில் முயற்சியின் இலாபங்கள் மீது மற்றைய அரசினால் வரி விதிக்க முடியுமாயினும், அது அந்நிரந்தரத் தாபனத்திற்குச் சேரவேண்டிய தொகையினால் வரையறுக்கப்பட்டதாகவே அமையும்.

2. 3 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் கீழ், ஒப்பந்த அரசு ஒன்றில் தொழில் முயற்சியொன்று மற்றைய ஒப்பந்த அரசில் அமைந்துள்ள நிரந்தரத் தாபனமொன்றினூடாக அம் மற்றைய ஒப்பந்த அரசில் அதன் வியாபாரத்தைக் கொண்டு நடாத்துகின்ற சந்தர்ப்பத்தில், அந்நிரந்தரத் தாபனம் எவ்வகையான தொழில் முயற்சியாக இருப்பினும், அத்தொழில் முயற்சியுடன் அந்நிலைமை அல்லது அதற்குச் சமனான நிலைகளின் கீழ், அச்செயற்பாடுகளுக்கு அல்லது அதற்குச் சமனான செயற்பாடுகளில் பூரணமாக, சுதந்திரமாக ஈடுபடுகின்ற வேறுபட்ட அல்லது தனியான தொழில் முயற்சியொன்று காணப்படுமாயின் அதற்குக் கிடைக்கும் என்று எதிர்பார்க்க முடியுமான இலாபங்கள், அந்நிரந்தரத் தாபனத்திற்குக் கிடைத்ததாக ஒவ்வொரு ஒப்பந்த அரசிலும் கருதப்படுதல் வேண்டும்.

3. நிரந்தரத் தாபனம் ஒன்றின் இலாபத்தைத் தீர்மானிக்கின்ற போது, நிறைவேற்று மற்றும் பொது நிர்வாகச் செலவுகள் உள்ளிட்ட அந்நிரந்தர தாபனத்தின் வியாபாரச் செயற்பாடுகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகளை, அவை அந்நிரந்தரத் தாபனம் அமைந்துள்ள அரசில் அல்லது பிறிதொரு இடத்தில் மேற்கொள்ளப்பட்டதாக இருப்பினும் அவற்றைக் கழிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குதல் வேண்டும்.

4. வியாபாரத்தின் மொத்த இலாபம், அதன் பல்வேறு தரப்புக்கள் மத்தியில் பகிரப்படுகின்ற முறையை அடிப்படையாகக் கொண்டு நிரந்தரத் தாபனத்திற்குச் சேரவேண்டிய இலாபத்தை தீர்மானிப்பது, ஒப்பந்த அரசு ஒன்றில் வழக்காறாக இருக்கும் வரை, இவ் உறுப்புரையின் 2 ஆம் பந்தியில் உள்ள எந்தவொன்றும், அத்தகைய வழக்காற்றின்படி மேற்கொள்ள முடியுமான பகிர்ந்தளிப்பின் ஊடாக வரி அறவிட முடியுமான இலாபத்தைத் தீர்மானிப்பதனைத் தடுக்கக்கூடாது. எனினும், பின்பற்றப்படும் பகிர்வு முறை இவ் உறுப்புரையில் உள்ளடங்கியுள்ள அடிப்படைகளுக்கு இணங்கியதான பெபேறுகளைத் தரக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

5. அவ்வாறு செய்யாதிருப்பதற்குப் பொருத்தமான, போதியளவு காரணங்கள் இருப்பின் மாத்திரமே, மேற்குறிப்பிட்ட பந்திகளின் நோக்கங்களுக்காக ஒவ்வொரு வருடமும் ஒரே முறையின் ஊடாக நிரந்தரத் தாபனம் ஒன்றிற்குச் சேர வேண்டிய இலாபம் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

6. இவ் ஒப்பந்தத்தின் ஏனைய உறுப்புரைகளில் பிரத்தியேகமாகக் குறிப்பிடப்பட்டுள்ள வருமான வகைகள், இலாபங்களில் உள்ளடக்கப்படும் சந்தர்ப்பங்களில் அவ் உறுப்புரைகளின் ஏற்பாடுகள் மீது இவ் உறுப்புரையின் ஏற்பாடுகள் தாக்கம் செலுத்தக் கூடாது.

7. ஏதேனும் ஒரு நிரந்தரத் தாபனம், தொழில் முயற்சிக்காக வெறுமனே பொருட்களை அல்லது வணிகப் பொருட்களைக் கொள்வனவு செய்வதன் காரணமாக ஏதேனும் ஒரு இலாபத்தை அந் நிரந்தரத் தாபனத்துக்கு சேர வேண்டியதாகக் கருதக் கூடாது.

**உறுப்புரை 8**

கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து

1. சர்வதேச போக்குவரத்தில் விமானங்களை இயக்குவதிலிருந்து கிடைக்கும் இலாபங்கள் மீது அவ்விமானப் போக்குவரத்தினை நடாத்துகின்ற தொழில் முயற்சி வதியும் ஒப்பந்த அரசில் மாத்திரமே வரி விதிக்கப்படுதல் வேண்டும்.

2. ஒப்பந்த அரசு ஒன்றில், மற்றைய ஒப்பந்த அரசில் அமைந்துள்ள தொழில் முயற்சியொன்று சர்வதேச போக்குவரத்தில் கப்பல் தொழிற்பாட்டின் மூலம், இலாபமீட்டுமாயின் முதலில் குறிப்பிடப்பட்ட அரசில் வரி அறவிட முடியுமாயினும், அவ்வாறு அறவிடப்படும் வரியை, அதில் 50 வீதத்துக்குச் சமனான அளவினால் குறைத்தல் வேண்டும்.

3. இவ் உறுப்புரையின் நோக்கங்களுக்காக, சர்வதேச போக்குவரத்திற்காகப் பயன்படுத்தப்படும் கப்பல் மற்றும் விமானத் தொழிற்பாட்டின் மூலம் கிடைக்கும் இலாபத்தில் தேவையைப்பொறுத்து, அதன் வாடகை அல்லது அதன் பயன்பாடு, பராமரிப்பு அல்லது வாடகை சர்வதேச போக்குவரத்தில் கப்பல்களை அல்லது விமானங்களை இயக்குவதனால் இடைநேரானதாக ஏற்பட்டிருப்பின்,

(அ) வெற்றுக் கப்பல் அடிப்படையில் வாடகைக்கு வழங்கப்பட்ட கப்பல்கள் அல்லது விமானங்கள் மூலம் உழைக்கும் இலாபங்கள்.

(ஆ) பொருட்கள் அல்லது வணிகப் பொருட்கள் போக்குவரத்திற்காகப் பயன்படுத்தப்படும் கொள்கலன்களைப் பயன்படுத்துதல், பராமரித்தல் அல்லது குத்தகைக்கு வழங்குவதன் மூலம் கிடைக்கும் இலாபங்கள் (ட்ரேலர் மற்றும் கொள்கலன் போக்குவரத்துடன் தொடர்புடைய உபகரணங்கள் அடங்கலாக).

என்பன குறிப்பாக உள்ளடங்குதல் வேண்டும்.

4. ஏதேனும் ஒரு குழாத்தில், ஒரு கூட்டு வியாபாரத்தில் அல்லது ஒரு சர்வதேச தொழிற்பாட்டு முகவர் நிறுவனத்தில் பங்கேற்பதன் மூலம் கிடைக்கும் இலாபங்கள் தொடர்பிலும் 1 ஆம், 2 ஆம் 3 ஆம் பந்திகளின் ஏற்பாடுகளின் ஏற்புடையதாகும்.

**உறுப்புரை 9**

கூட்டுத் தொழில் முயற்சிகள்

1. (அ) ஒப்பந்த அரசொன்றின் தொழில் முயற்சியொன்று மற்றைய ஒப்பந்த அரசிலுள்ள தொழில்முயற்சியொன்றின் முகாமை, கட்டுப்பாடு அல்லது மூலதனம் தொடர்பில் நேரடியாக அல்லது மறைமுகமாகப் பங்கேற்கும் அல்லது ;

(ஆ) ஒரே நபர்கள் ஒப்பந்த அரசு ஒன்றின் தொழில் முயற்சி ஒன்றிலும் மற்றைய ஒப்பந்த அரசின் தொழில் முயற்சியொன்றின் முகாமை, கட்டுப்பாடு அல்லது மூலதனம் என்பவற்றிலும் நேரடியாக அல்லது மறைமுகமாகப்

பங்கேற்கும் சந்தர்ப்பத்தில், மற்றும் அச்சந்தர்ப்பங்கள் இரண்டில் ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் சுதந்திர தொழில் முயற்சிகளுக்கிடையில் நடைபெறும் வணிக மற்றும் நிதித் தொடர்புகள் பற்றிய நிபந்தனைகளுக்கு மாற்றமான நிபந்தனைகள் அத்தொழில் முயற்சிகள் இரண்டுக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் அல்லது விதிக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில், அந்நிபந்தனைகள் காணப்படாவிட்டால் அத்தொழில் முயற்சிகளில் ஒன்றுக்குச் சேர எனினும் அந்நிபந்தனையின் காரணமாக அவ்வாறு சேராத ஏதேனும் இலாபங்கள் இருப்பின், அவற்றை அத்தொழில் முயற்சியின் இலாபங்களில் உள்ளடக்கி அதற்கிணங்க இலாபங்கள் மீது வரி அறவிட முடியும்.

*2.* ஒப்பந்த அரசொன்று, தனது தொழில் முயற்சியொன்றின் இலாபத்தில் உள்ளடக்கப்படுவதும் அதற்கிணங்க வரி விதிக்கப்படுவதும் மற்றைய ஒப்பந்த அரசில் வரிவிதிக்கப்பட்டதுமான இலாபத்தை, இரண்டு தொழில் முயற்சிகள் மத்தியில் ஏற்படுத்திக் கொள்ளும் நிபந்தனைகள் சுதந்திரமான தொழில் முயற்சிகள் மத்தியில் ஏற்படுத்திக் கொள்ள முடியுமான நிபந்தனைகளாகவே காணப்படுமிடத்து, முதலில் குறிப்பிட்ட ஒப்பந்த அரசின் தொழில் முயற்சியொன்றுக்கு கிடைக்க வேண்டியிருப்பின், அதற்கிணங்க மற்றைய ஒப்பந்த அரசில் விதிக்கப்பட்ட வரியின் அளவுக்குப் பொருத்தமான செம்மையாக்கல்களை மற்றைய அரசு மேற்கொள்ளுதல் வேண்டும். அத்தகைய செம்மையாக்கலை நிர்ணயிக்கின்ற போது இவ் ஒப்பந்தத்தின் மற்றைய ஏற்பாடுகள் தொடர்பிலும் உரிய கவனத்தைச் செலுத்துதல் வேண்டும். அத்துடன் அவசியமாயின் ஒப்பந்த அரசுகளின் தகவுடைய அதிகாரிகள் தமக்குள் கலந்தாலோசித்தல் வேண்டும்.

*3.* வரிமோசடிகள் தொடர்பில் 2 ஆம் பந்தியில் உள்ள ஏற்பாடுகள் ஏற்புடையதாக மாட்டா.

### *உறுப்புரை 10*

பங்கிலாபங்கள்

*1.* ஒப்பந்த அரசொன்றில் வதியும் கம்பனியொன்றினால் மற்றைய ஒப்பந்த அரசில் வதியும் ஒருவருக்குச் செலுத்தப்படுகின்ற பங்கிலாபங்கள் மீது அம்மற்றைய அரசில் வரிவிதிக்கப்பட முடியும்.

*2.* எவ்வாறாயினும், பங்கிலாபங்களைச் செலுத்துகின்ற கம்பனி வதியும் ஒப்பந்த அரசிலும், அவ் அரசின் சட்டங்களுக்கு இணங்கிய வகையில் அத்தகைய இலாபங்களிலிருந்து வரி அறவிட முடியுமாயினும், அப்பங்கிலாபத்தினைப் பெறுபவர் மற்றைய ஒப்பந்த அரசின் வதிபவராக இருப்பின், அறவிடும் வரியானது, மொத்தப் பங்கிலாபத்தில் 10% ஐ விட விஞ்சக் கூடாது. பங்கிலாபங்கள் செலுத்தப்படுகின்ற இலாபங்கள் விடயத்தில் கம்பனியிடமிருந்து வரி அறவிடுவது தொடர்பில் இப்பந்தியின் ஏற்பாடுகள் தாக்கம் செலுத்தக்கூடாது.

*3.* இவ் உறுப்புரையில் பயன்படுத்தப்பட்டுள்ள "பங்கிலாபங்கள்" என்ற சொல், பங்குகள் மூலம் கிடைக்கும் வருமானங்களையும் கடன் உரிமைக் கோரிக்கைகள் அல்லாத வேறு உரிமைகளிலிருந்து அல்லது இலாபத்தில் பங்கேற்றல் மூலம் கிடைக்கும் வருமானங்களயும், இலாபங்களைப் பகிர்ந்தளிக்கின்ற கம்பனியொன்று வதியும் ஒப்பந்த அரசின் சட்டங்கள் மூலம் பங்குகளிலிருந்து கிடைக்கின்ற வருமானம் வரிவிதிப்புக்குள்ளாக்கப்படும் முறையில், வரிவிதிப்புக்குள்ளாகும் வேறு நியதிச்சட்ட உரிமைகள் ஊடாகக் கிடைக்கும் வருமானத்தையும் குறிக்கும்.

*4.* பங்கிலாபங்களின் பயனுரிமையாளர், ஒப்பந்த அரசு ஒன்றில் வதிபவராக இருந்து மற்றைய ஒப்பந்த அரசில் பங்கிலாபங்களைச் செலுத்தி வியாபாரச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக வசிப்பிட அடிப்படையில் அங்கு அமைந்துள்ள நிரந்தரத் தாபனம் ஒன்றின் ஊடாக அல்லது அங்கு அமைந்துள்ள நிரந்தர அடிப்படை ஒன்றின் ஊடாக சுதந்திரமான தனிப்பட்ட சேவை ஒன்றை அம் மற்றைய ஒப்பந்த அரசினுள் மேற்கொண்டு பங்கிலாபங்களை செலுத்துகின்ற நிலையான அடிப்படை, அந்நிரந்தரத் தாபனத்துடன் பயனுறுதிமிக்க முறையில் தொடர்புகளை ஏற்படுத்தி நிறுவப்பட்ட ஒரு கம்பனியாயின் 1 ஆம் 2 ஆம் பந்திகளின் ஏற்பாடுகள் ஏற்புடையதாக மாட்டா. அத்தகைய சந்தர்ப்பங்களுக்கு ஏற்ற வகையில் இவ் ஒப்பந்தத்தின் 7 ஆம் உறுப்புரை அல்லது 14 ஆம் உறுப்புரை ஏற்புடையதாகும்.

*5.* ஒப்பந்த அரசு ஒன்றில் வதியும் கம்பனியொன்று, மற்றைய ஒப்பந்த அரசில் இலாபம் அல்லது வருமானம் உழைக்கும் சந்தர்ப்பத்தில், அக்கம்பனி செலுத்தும் பங்கிலாபங்கள் மற்றைய அரசில் வதியும் ஒருவருக்குச் செலுத்தப்படும் போது அல்லது அம்மற்றைய அரசில் அமைந்துள்ள பயனுறுதிமிக்க முறையில் தொடர்புபட்டுள்ள நிரந்தரத் தாபனம் ஒன்றுடன் அல்லது நிரந்தர அடிப்படை ஒன்றுடன் தொடர்பானதாக உள்ளவிடத்து தவிர, கம்பனியால் செலுத்தப்படுகின்ற பங்கிலாபங்கள் தொடர்பில் எந்தவொரு வரியும் அம்மற்றைய ஒப்பந்த அரசினால் விதிக்கப்படாது இருக்கும் வரை, கம்பனியினால் செலுத்தப்படும் பங்கிலாபங்கள் அல்லது பகிரப்படாத இலாபங்கள் அம்மற்றைய அரசில் எழும் இலாபங்களில் அல்லது வருமானங்களில் மொத்தமாக அல்லது பகுதியாக உள்ளடங்கியிருப்பினும் கம்பனியின் பகிரப்படாத இலாபங்கள் மீதான வரியில் உட்படுத்தாதிருக்கவும் முடியும்.

*6.* பங்கிலாபங்கள் செலுத்தப்படும் பங்குகளை அல்லது வேறு உரிமைகளை உருவாக்குவதன் அல்லது ஒப்படைப்பதன் ஊடாக இவ்வியாபாரத்திலிருந்து அநுகூலங்களைப் பெறுவது, அவ்வாறு உருவாக்குவதுடன் அல்லது ஒப்படைப்பதுடன் தொடர்புடைய எவரேனும் ஆளொருவரின் பிரதான குறிக்கோளாக அல்லது பிரதான குறிக்கோளாக அல்லது பிரதான குறிக்கோள்களில் ஒன்றாக இருப்பின்; அத்தகைய சந்தர்ப்பங்கள் தொடர்பில் இவ்வுறுப்புரையின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகமாட்டா.

***உறுப்புரை 11***

வட்டி

1. ஒப்பந்த அரசொன்றில் எழுவதும் வட்டி மற்றைய ஒப்பந்த அரசின் வதியும் ஒருவருக்குச் செலுத்தப்படுவதுமான வட்டியின் மீது அம்மற்றைய அரசில் வரி விதிக்கப்பட முடியும்.

2. எவ்வாறாயினும், அத்தகைய வட்டியின் மீது அது எழும் ஒப்பந்த நாட்டிலும் அந்நாட்டின் சட்டங்களுக்கு இணங்க வரி விதிக்கப்பட முடியுமாயினும், வட்டியின் பயனுரிமையாளர் மற்றைய ஒப்பந்த அரசில் வதிபவராக இருப்பின், அவ்வாறு அறவிடப்படும் வரியின் அளவு மொத்த வட்டித் தொகையின் 10% ஐ விட விஞ்சக் கூடாது.

3. 2 ஆம் பந்தியின் ஏற்பாடுகளைக் கவனத்திற் கொள்ளாது, ஒப்பந்த அரசு ஒன்றில் எழுவதும் மற்றைய ஒப்பந்த அரசின் அரசாங்கம், அரசியல் உப பிரிவு ஒன்று, உள்ளூர் அதிகார சபை ஒன்று உள்ளிட்ட இலங்கை மத்திய வங்கி அல்லது அவ் அரசுக்கு அடிப்படையில் சொந்தமான அல்லது அதனால் நிர்வகிக்கப்படும் நிதித் தாபனம் ஒன்று உழைக்கும் வட்டி, முதலில் குறிப்பிட்ட நாட்டில் வரியிலிருந்து விடுவிக்கப்படுதல் வேண்டும்.

4. இவ் உறுப்புரையில் பயன்படுத்தப்பட்டுள்ளது போன்று “வட்டி” என்ற வாசகம், ஈட்டுப் பொருள் ஒன்றை அடகாக வைத்துப் பெறப்பட்ட அல்லது அவ்வாறு அடகு வைக்காது பெறப்பட்ட, கடன்காரரின் இலாபத்திற் பங்கு கொள்ளும் உரிமையைக் கொண்ட அல்லது அவ் உரிமையினைக் கொண்டிராத, அனைத்து வகையான கடன் உரிமைகள் மூலமும் கிடைக்கின்ற வருமானங்களையும் குறிப்பாக அரசாங்கப் பிணையங்கள், முறிகள் மற்றும் தொகுதிக் கடன்கள் மூலம் கிடைக்கும் வெகுமதிகள் மற்றும் பரிசுகள் உள்ளிட்ட வருமானங்களையும் குறிக்கும். இவ் உறுப்புரையின் நோக்கங்களுக்காக தாமதித்துச் செலுத்தப்படும் கொடுப்பனவுகளுக்கான தண்டப் பணம் வட்டியாகக் கருதப்படக் கூடாது.

5. ஒப்பந்த அரசு ஒன்றில் வதிபவரான வட்டியின் பயனுரிமையாளர், வட்டி எழும் மற்றைய ஒப்பந்த அரசில் அமைந்துள்ள நிரந்தரத் தாபனம் ஒன்றின் ஊடாக வியாபாரச் செயற்பாடுகளைக் கொண்டு நடாத்துவாராயின், அல்லது அங்கு அமைந்துள்ள நிலையான அடிப்படை ஒன்றின் மூலம் மற்றைய ஒப்பந்த அரசின் உள்ளே சுதந்திரமான தனிப்பட்ட சேவைகளை மேற்கொள்வாராயின், மற்றும் வருமானம் செலுத்தப்படும் கடனுரிமை, அந்நிரந்தரத் தாபனத்துடன் அல்லது நிரந்தர அடிப்படையுடன் உயிர்ப்பான தொடர்பினைக் கொண்டிருப்பின் 1 ஆம், 2 ஆம் பந்திகளின் ஏற்பாடுகள் ஏற்புடையதாக மாட்டா. அத்தகைய சந்தர்ப்பங்களில் இவ் ஒப்பந்தத்தின் 7 ஆம் உறுப்புரையின் அல்லது 14 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகுதல் வேண்டும்.

6. வருமானம் செலுத்துபவர் ஒப்பந்த அரசாக அல்லது அதன் அரசியல் உப பிரிவு ஒன்றாக அல்லது உள்ளூர் அதிகாரசபை ஒன்றாக அல்லது அவ் அரசில் வதியும் ஒருவராக இருக்குமிடத்து, வருமானம் அவ் ஒப்பந்த அரசில் எழுவதாகக் கருதப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், வருமானம் செலுத்துபவர் ஒப்பந்த அரசு ஒன்றில் வதிபவராக இருப்பினும், இல்லாவிடினும் அவருக்கு வருமானத்தைச் செலுத்துவதற்கு அல்லது சேர்வதற்குரிய கடன்பெறு தன்மை மற்றும் தொடர்புடைய நிரந்தரத் தாபனம் ஒன்று அல்லது நிலையான அடிப்படை ஒன்று ஒப்பந்த அரசு ஒன்றில் காணப்படும் சந்தர்ப்பத்தில் நிரந்தரத்தாபனம் அல்லது நிலையான அடிப்படை அமைந்துள்ள அரசில் அவ் வருமானம் எழுவதாகக் கருதுதல் வேண்டும்.

7. செலுத்துநருக்கும் பயனுரிமையாளருக்கும் இடையில் அல்லது அவர்கள் இருவருக்கும் வேறு எவரேனும் தனியாளொருவருக்கும் இடையில் காணப்படும் விசேட தொடர்பு ஒன்றின் காரணமாகச் செலுத்தப்படும் வருமானத்தின் அளவு, அது செலுத்தப்படும் கடனுரிமையைக் கவனத்திற் கொண்டு, அத்தகைய தொடர்பு காணப்படாத சந்தர்ப்பத்தில் செலுத்துபவர், பயனுரிமையைக் கொண்டுள்ள ஆள் ஆகிய இருவரும் உடன்பட்டிருக்க முடியுமான அளவை விட விஞ்சுமாயின், இறுதியாகக் குறிப்பிட்ட அளவின் மீது மாத்திரமே இவ் உறுப்புரையின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகுதல் வேண்டும். அத்தகைய சந்தர்ப்பத்தில் கொடுப்பனவுகளின் மேலதிகப் பகுதி மீது, இவ் ஒப்பந்தத்தின் மற்றைய ஏற்பாடுகளைப் பொருத்தமான முறையில் கவனத்தில் எடுத்து ஒவ்வொரு ஒப்பந்த அரசினதும் சட்டத்திற்கு இணங்க மேலும் வரிகள் விதிக்கப்பட முடியும்.

8. வட்டி செலுத்தப்படும் கடனுரிமையை ஏற்படுத்துவதன் மூலம் அல்லது ஒப்படைப்பதன் மூலம் பயன்பெறுவது அவ்வாறு ஏற்படுத்துபவரின் அல்லது ஒப்படைப்பவரின் பிரதான குறிக்கோளாக அல்லது பிரதான குறிக்கோள்களில் ஒன்றாக இருப்பின், அது தொடர்பில் இவ்வுறுப்புரையின் ஏற்பாடுகள் ஏற்புடையதாக மாட்டா.

***உறுப்புரை 12***

வேத்துரிமைகள்

*1. ஒப்பந்த அரசு ஒன்றில் எழுவதும் மற்றைய ஒப்பந்த அரசில் வதியும் ஒருவருக்குச் செலுத்தப்படுவதுமான வேத்துரிமைகள் மீது அம்மற்றைய ஒப்பந்த அரசில் வரி விதிக்கப்பட முடியும்.*

*2. எவ்வாறாயினும் அவ்வேத்துரிமைகள் மீது அவை எழும் ஒப்பந்த அரசிலும் அவ் ஒப்பந்த அரசின் சட்டத்திற்கும் இணங்க வரி விதிக்கப்பட முடியும். எனினும், வேத்துரிமைகளின் பயனுரிமையாளர் மற்றைய ஒப்பந்த அரசில் வதிபவராக இருப்பின், அவ்வாறு அறவிடப்படும் வரி, அவ்வேத்துரிமைகளின் மொத்தப் பெறுமானத்தில் 10 சதவீதத்தை விஞ்சக் கூடாது.*

*3. இவ் உறுப்புரையில் பயன்படுத்தியுள்ளவாறு "வேத்துரிமைகள்" என்ற சொல் கணனி மென்பொருட்கள், சினிமாச் சுருள் திரைப்படங்கள் அல்லது வானொலி அல்லது தொலைக்காட்சி ஒளிபரப்புக்குப் பயன்படுத்தும் நாடாக்கள், ஒலிப் பதிவு நாடாக்கள் உள்ளிட்ட ஏதேனும் இலக்கிய, கலை அல்லது விஞ்ஞானப் படைப்புக்களின் வெளியீட்டு உரிமைகள், காப்புரிமைப் பத்திரங்கள், வர்த்தகச் சின்னங்கள், வடிவங்கள் அல்லது மாதிரிகள், சுவட்டு வரைபடங்கள், இரகசியப் பொருட்பட்டியலொன்றை அல்லது செயன்முறையொன்றைப் பயன்படுத்துவதற்கான அல்லது பயன்படுத்தும் உரிமைக்கான அல்லது தொழில்நுட்ப, வர்த்தக அல்லது விஞ்ஞான உபகரணங்களை அல்லது விஞ்ஞான, வர்த்தக அல்லது தொழில்நுட்ப அனுபவம் ஒன்றுடன் தொடர்புடைய தகவல்களைப் பயன்படுத்துவதற்கான அல்லது பயன்படுத்தும் உரிமைக்கான ஒரு அடிப்படையாகக் கிடைத்த எவ்வகையான கொடுப்பனவையும் குறிக்கும்.*

*4. வேத்துரிமைப் பயனுரிமையாளர் ஒப்பந்த அரசொன்றில் வதிபவராகவும் வேத்துரிமை எழும் மற்றைய ஒப்பந்த அரசில் அமைந்தள்ள நிரந்தரத் தாபனம் ஒன்றின் ஊடாக வியாபாரம் ஒன்றைக் கொண்டு நடாத்துவதாயின் அல்லது மற்றைய ஒப்பந்த அரசில் அமைந்துள்ள நிலையான அடிப்படை ஒன்றின் ஊடாக சுதந்திரமான தனிப்பட்ட சேவைகளை மேற்கொள்வதாயின் வேத்துரிமைகள் செலுத்தப்படுவது எவ்வகையான உரிமை அல்லது ஆதனம் தொடர்பிலாயினும் அவ்வுரிமை அல்லது அவ் ஆதனம் அந்நிரந்தரத் தாபனத்துடன் அல்லது நிலையான அடிப்படையுடன் உயிர்ப்பான தொடர்பினைக் கொண்டிருப்பின், இவ் உறுப்புரையின் 1 ஆம், 2 ஆம் பந்திகளிலுள்ள ஏற்பாடுகள் ஏற்புடையதாகக் கூடாது. அத்தகைய சந்தர்ப்பத்தில் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு உறுப்பரை 7 இன் அல்லது உறுப்புரை 14 இன் ஏற்பாடுகள் ஏற்புடையதாகுதல் வேண்டும்.*

*5. (அ) வேத்துரிமைகளைச் செலுத்துபவர் அவ்வரசினுள்ளே உள்ள ஒரு அரசியல் உப பிரிவாக அல்லது ஒரு உள்ளூர் அதிகார சபையாக அல்லது அவ் அரசில் வதியும் ஒருவராக இருக்குமிடத்து, இருக்குமிடத்து, வேத்துரிமைகள் அல்லது தொழில்நுட்பச் சேவைகள் கட்டணங்கள் அவ் ஒப்பந்த அரசில் எழுபவையாகக் கொள்ளப்படல் வேண்டும். எவ்வாறாயினும், வேத்துரிமைகளைச் செலுத்தும் நபர் ஒப்பந்த அரசொன்றில் வதிபவராக இருப்பினும் இல்லாவிடினும் வேத்துரிமைகளைச் செலுத்தும் பொறுப்புடன் தொடர்புடைய நிரந்தரத் தாபனம் ஒன்று அல்லது நிலையான அடிப்படையொன்று ஒப்பந்த அரசில் அவருக்குச் சொந்தமாக இருந்து, அவ்வேத்துரிமைகள் அந்நிரந்தரத் தாபனம் அல்லது நிலையான அடிப்படையினால் செலுத்தப்படுமாயின், அச்சந்தர்ப்பத்தில் நிரந்தரத் தாபனம் அல்லது நிலையான அடிப்படை அமைந்துள்ள அரசில் அவ்வேத்துரிமைகள் அல்லது தொழில்நுட்ப சேவைக் கட்டணங்கள் எழுவதாகக் கருதுதல் வேண்டும்.*

*(ஆ) உப பந்தி (அ) வின் கீழ், ஒப்பந்த அரசொன்றின் அல்லது வேத்துரிமைகள் ஒப்பந்த அரசொன்றில் வேத்துரிமைகளைப் பயன்படுத்துதல், பயன்படுத்தும் உரிமை, உரித்துடைமை அல்லது ஆதனங்களுடன் அல்லது வழங்கப்படும் சேவைகளுடன் தொடர்புடையதாக இருக்குமிடத்து வேத்துரிமை அவ் அரசில் எழுவதாகக் கருத முடியும்.*

*6. செலுத்துபவருக்கும் பயனுரிமையாளருக்கும் இடையில் அல்லது அவர்கள் இருவருக்கும் வேறு எவரேனும் ஆளொருவருக்கும் இடையில் காணப்படும் விசேடமான தொடர்பின் காரணமாக, பயன்பாடு, உரிமை அல்லது தகவல்களைக் கவனத்திற் கொண்டு, செலுத்தப்படும் வேத்துரிமைகளின் பெறுமதி அத்தகைய தொடர்பு ஏதும் இல்லாதவிடத்து செலுத்துபவரும் பெறுபவரும் உடன்படும் சாத்தியம் கொண்ட தொகையை விஞ்சுமாயின், இவ்வுறுப்புரையின் மற்றைய ஏற்பாடுகள் தொடர்பில் உரிய கவனம் செலுத்தி, அச்சந்தர்ப்பத்தில் கொடுப்பனவுகளில் காணப்படும் மேலதிக தொகை மீது ஒவ்வொரு ஒப்பந்த அரசினதும் சட்டத்திற்கு இணங்க வரி விதிக்கப்படுதல் வேண்டும்.*

*7. வேத்துரிமை செலுத்தப்படும் உரிமையை ஏற்படத்துவதன் மூலம் அல்லது ஒப்படைப்பதன் மூலம் பயன்பெறுவது அவ்வாறு ஏற்படுத்துபவரின் அல்லது ஒப்படைப்பவரின் பிரதான குறிக்கோளாக அல்லது பிரதான குறிக்கோள்களில் ஒன்றாக இருப்பின், அது தொடர்பில் இவ்வுறுப்புரையின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகமாட்டா.*

### உறுப்புரை 13

மூலதன இலாபங்கள்

1. ஒப்பந்த அரசு ஒன்றில் வதியும் ஒருவர், உறுப்புரை 6 இல் குறிப்பிடப்பட்டுள்ளதும், மற்றைய ஒப்பந்த அரசில் அமைந்துள்ளதுமான அசையா ஆதனங்களை உரிமை மாற்றம் செய்வதன் ஊடாகப் பெற்ற இலாபங்கள் மீது அம்மற்றைய அரசில் வரி விதிக்கப்படலாம்.

2. ஒப்பந்த அரசு ஒன்றின் தொழில் முயற்சி ஒன்றுக்குச் சொந்தமான, மற்றைய ஒப்பந்த அரசில் உள்ள நிரந்தரத் தாபனம் ஒன்றின் வியாபார ஆதனங்களில் ஒரு பகுதியாகவுள்ள அசையும் ஆதனங்களை உரிமை மாற்றம் செய்வதன் மூலம் அல்லது ஒப்பந்த அரசு ஒன்றில் வதியும் ஒருவருக்கு மற்றைய ஒப்பந்த அரசில் உள்ள நிலையான அடிப்படையுடன் தொடர்புடைய வகையில் சுதந்திரமான தனிப்பட்ட சுயாதீன சேவை வழங்கலுக்காகவுள்ள அசையும் ஆதனங்களை உரிமை மாற்றம் செய்வதன் மூலம் கிடைக்கும் இலாபங்கள் மீது (அது மாத்திரம் அல்லது முழு தொழில் முயற்சியுடன்) அல்லது அந்நிலையான அடிப்படையை உரிமை மாற்றம் செய்வதன் மூலம் கிடைக்கும் இலாபங்கள் அடங்கலாக அம் மற்றைய அரசில் வரி விதிக்கப்படலாம்.

3. ஒப்பந்த அரசு ஒன்றின் வதியுநர் ஒருவர், சர்வதேசப் போக்குவரத்தில் இயக்கப்படும் கப்பல்கள் அல்லது விமானங்கள் அல்லது அத்தகைய கப்பல்கள் அல்லது வானூர்தியுடன் தொடர்புடைய அசைவுறு ஆதனங்களைப் பாராதீனப்படுத்துவதன் மூலம் பெறுகின்ற இலாபங்கள் மீது அத்தொழில் முயற்சியின் பயன்மிக்க முகாமை அமைந்துள்ள ஒப்பந்த அரசில் மட்டுமே வரி விதிக்கப்படலாம்.

4. கம்பனியொன்றின் மூலதனப் பங்குகளை பாராதீனப்படுத்துவதன் மூலம் ஒப்பந்த அரசொன்றின் வதியுநர் ஒருவர் பெறும், ஒப்பந்த அரசொன்றில் அமைந்துள்ள அசையா ஆதனங்களிலிருந்து நேரடியாக அல்லது மறைமுகமாகப் பெற்றுக் கொள்ளும் இலாபங்கள் மீது அந்த ஒப்பந்த அரசில் மாத்திரமே வரி விதிக்கப்பட முடியும்.

5. 4 ஆம் பந்தியில் குறிப்பிடப்படாத, கம்பனியொன்றின் பங்குகளின் 25 சதவீதத்தை அல்லது அதனை விஞ்சிய தொகையைப் பிரதிநிதித்துவம் செய்யும் கம்பனியொன்றின் பங்குகளைப் பாராதீனப்படுத்துவதன் மூலம் கிடைக்கும் இலாபங்கள் மீது அவை வழங்கப்பட்டுள்ள ஒப்பந்த அரசில் மாத்திரமே வரி விதிக்கப்பட முடியும்.

6. மேலே உள்ள பந்திகளில் குறிப்பிடப்பட்டவை தவிர்ந்த வேறு எந்தவொரு ஆதனத்தையும் பாராதீனப்படுத்துவதன் மூலம் கிடைக்கும் இலாபங்கள் மீது அவ்வாறு பாராதீனப்படுத்துபவர் வதியுநராகவுள்ள ஒப்பந்த அரசில் மாத்திரமே வரி விதிக்கப்பட வேண்டும்.

7. 'பாராதீனப்படுத்தல்' என்ற சொல் விற்பனை, பரிமாற்று, மாற்றல் அல்லது ஆதனமொன்றின் கைதுறப்பு அதன் ஏதேனும் உரிமையினை இல்லாதாக்குதல் அல்லது ஒப்பந்த அரசாங்கத்தின் நடைமுறையிலுள்ள ஏதேனும் சட்டத்தின் கீழ் கட்டாய சுவீகாரம் எனப்பொருள்படும்.

### உறுப்புரை 14

சுயாதீன தனிப்பட்ட சேவைகள்

1. மற்றைய ஒப்பந்த அரசில் வரி விதிக்கப்பட முடியுமான பின்வரும் சந்தர்ப்பங்களில் தவிர, உயர்தொழில் சேவைகள் அல்லது அவற்றையொத்த வேறு தனிப்பட்ட சுயாதீன செயற்பாடுகளுக்காக ஒப்பந்த அரசொன்றின் வதியுநரான ஆளொருவர் பெறும் வருமானத்தின் மீது அவ் அரசில் மாத்திரமே வரி விதிக்கப்பட முடியும்.

(அ) அவரது செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக மற்றைய ஒப்பந்த அரசில் நிரந்தர அடிப்படையொன்றை நிலையாகக் கொண்டிருக்குமிடத்து, அந்நிரந்தர அடிப்படைக்குச் சேர்க்க முடியுமான வருமானத்தின் மீது மற்றைய ஒப்பந்த அரசில் வரி விதிக்கப்பட முடியும்;

(ஆ) 12 மாத காலப் பகுதியொன்றில் மொத்தமாக 183 நாட்களுக்கு மேற்பட்ட காலப் பகுதியொன்றில் அல்லது காலப் பகுதிகளில் மற்றைய அரசில் தங்கியிருக்குமிடத்து, அந்த மற்றைய அரசில் தனது செயற்பாடுகள் மூலம் அவர் பெறும் வருமானத்தின் மீது அந்த ஒப்பந்த அரசில் வரி விதிக்கப்பட முடியும்.

2. "உயர்தொழில் சேவைகள்" என்ற வாசகம் சுயாதீனமான விஞ்ஞான, இலக்கிய, கலை, கல்வி, அல்லது கற்பித்தல் செயற்பாடுகளையும் மருத்துவர்கள், சட்டத்தரணிகள், பொறியியலாளர்கள், கட்டடக்கலைஞர்கள், பல் மருத்துவர்கள், கணக்காளர்கள் ஆகியோரின் சுயாதீன செயற்பாடுகளையும் குறிப்பாக உள்ளடக்கியதாகும்.

### உறுப்புரை 15

சார்ந்துள்ள தனிப்பட்ட சேவைகள்

1. இந்த ஒப்பந்தத்தின் 16, 18 மற்றும் 19 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய ஒப்பந்த அரசொன்றின் வதியுநர் ஒருவர் தனது தொழில் மூலம் பெறும் சம்பளம், வேதனங்கள் போன்ற பெறுவனவுகளை மற்றைய ஒப்பந்த நாட்டில் வதியுநர் புரியும் பட்சத்தில் அன்றி

மேற்குறித்த அரசில் மாத்திரம் வரி விதிப்புக்குள்ளாக்கல் வேண்டும். அவ்வாறு தொழில் புரியும் பட்சத்தில் அந்த தொழில் மூலம் உழைக்கும் ஊதியத்தை மேற்கூறிய மற்றைய ஒப்பந்த அரசில் வரி விதிப்புக்குள்ளாக்க முடியும்.

2. 1 ஆம் பந்தியின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், ஒப்பந்த அரசொன்றின் வதியுநர் ஒருவர் மற்றைய ஒப்பந்த அரசில் தொழில்புரிவதன் மூலம் உழைக்கும் வேதனம்,

(அ) குறித்த நிதியாண்டில் ஆரம்பிக்கும் அல்லது முடிவடையும் எந்தவொரு பன்னிரண்டு மாத காலப் பகுதியிலும் மொத்தமாக 183 நாட்களுக்கு மேற்பட்ட காலப் பகுதியில் அல்லது காலப்பகுதிகளில் மற்றைய ஒப்பந்த அரசில் தங்குவாராயின், அத்துடன்

(ஆ) அவ்வேதனங்கள், மற்றைய ஒப்பந்த அரசில் வதியாத தொழில்தருநரொருவரால் அல்லது அவரவர் சார்பில் செலுத்தப்பட்டிருப்பின், அத்துடன்

(இ) அவ்வேதனம், தொழில்தருநர் அம்மற்றைய அரசில் வைத்திருக்கும் நிரந்தர நிறுவனமொன்றினால் செலுத்தப்படாததுமாக இருப்பின்,

அவ்வேதனத்தின் மீது முதலில் குறிப்பிட்ட அரசில் மாத்திரமே வரி விதிக்கப்பட வேண்டும்.

3. இந்த உறுப்புரையின் முற்போந்த பந்திகள் எவ்வாறிருப்பினும் , ஒப்பந்த அரசொன்றின் தொழில் முயற்சியொன்று, சர்வதேசப் போக்குவரத்தில் இயக்கும் கப்பல் அல்லது வானூர்தியின் மூலம் ஆற்றும் சேவை தொடர்பில் பெறப்படும் வேதனம் மீது, அத் தொழில்முயற்சியின் பயன்மிகு முகாமைத்துவம் அமைந்துள்ள ஒப்பந்த அரசில் மாத்திரம் வரி விதிக்கப்பட முடியும்.

**உறுப்புரை 16**

பணிப்பாளர் கட்டணங்கள்

1. ஒப்பந்த அரசொன்றின் வதியுநர் ஒருவர், மற்றைய ஒப்பந்த அரசில் வதிவுள்ள கம்பனியொன்றின் பணிப்பாளர் சபையின் அல்லது அதனையொத்த வேறேதேனும் பதவியை வகிப்பதன் மூலம் பெறும் பணிப்பாளர் கட்டணங்கள் மற்றும் அதனையொத்த கொடுப்பனவுகள் மீது அந்த மற்றைய அரசில் வரி விதிக்கப்படலாம்.

2. மற்றைய ஒப்பந்த அரசில் வதியும் கம்பனியொன்றின் உயர் முகாமைத்துவ நிலையிலுள்ள அலுவலரொருவர் என்ற வகையில் ஒப்பந்த அரசு ஒன்றில் வதியும் ஒருவர் பெறுகின்ற சம்பளங்கள், மற்றும் அவற்றையொத்த வேறு ஊதியங்கள் மீது அம்மற்றைய அரசில் விதிக்கப்படலாம்.

**உறுப்புரை 17**

கலைஞர்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள்

1. 14 ஆம், 15 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், ஒப்பந்த அரசில் வதியுமொருவர், ஆடல்கள், இயக்கத்திரைப்படம், வானொலி அல்லது தொலைக்காட்சி என்பவற்றின் கலைஞராக அல்லது இசைக் கலைஞராக அல்லது விளையாட்டு வீரராக அவரது தனிப்பட்ட தொழிற்பாடுகள் மூலம் மற்றைய ஒப்பந்த அரசில் பெறுகின்ற வருமானத்தின் மீது, அத்தொழிற்பாடுகள் இடம்பெறும் ஒப்பந்த அரசில் வரி விதிக்கப்படலாம்.

2. கலைஞர்கள் அல்லது விளையாட்டு வீரர்களின் தனிப்பட்ட முயற்சிகளிலிருந்து கிடைக்கும் வருமானங்கள் அக்கலைஞர்களுக்கு அல்லது விளையாட்டு வீரர்களுக்கு சேராமல், வேறொருவருக்குச் சேருமிடத்து 7, 14 மற்றும் 15 ஆம் உறுப்புரைகளின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், அவ்வருமானங்களின் மீது அக்கலைஞர்களின் அல்லது விளையாட்டு வீரர்களின் முயற்சிகள் இடம்பெறும் ஒப்பந்த அரசில் வரி விதிக்கப்படலாம்.

3. 1 ஆம் 2 ஆம் பந்திகளின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் ஒப்பந்த அரசுகளுக்கிடையிலான கலாசார ஒப்பந்தம் ஒன்றின் கீழ் அல்லது வேலைத்திட்டம் ஒன்றின கீழ், 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பின், அப்பயணத்திற்கு ஒப்பந்த அரசுகளில் ஒன்றின் உள்ளூராட்சி நிறுவனம் ஒன்று அல்லது அரசாங்க தாபனம் ஒன்று பூரணமான அல்லது போதியளவு உதவியினை வழங்கியிருப்பின் மாத்திரமே, அச்செயற்பாடுகளிலிருந்து பெறப்படும் வருமானங்களுக்கு, அவை மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்த அரசில் விலக்களிக்கப்படலாம்.

**உறுப்புரை 18**

ஓய்வூதியங்கள்

1. 19 ஆம் உறுப்புரையின் 2 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைவாக, ஒப்பந்த அரசு ஒன்றில் வதியும் ஒருவருக்கு மற்றைய கடந்த காலத்தில் ஒப்பந்த அரசில் செய்த தொழிலை அல்லது சேவையை கருத்திற்கொண்டு அம்மற்றைய ஒப்பந்த அரசின் மூலங்களிலிருந்து செலுத்தப்படும் ஓய்வூதியம் மற்றும் அதையொத்த ஊதியங்கள் மீது அந்த ஒப்பந்த அரசில் மட்டுமே வரி விதிக்கப்படலாம்.

2. 1 ஆம் பந்தியின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், ஒப்பந்த அரசொன்றின் சமூகப் பாதுகாப்பு முறைமைகளின் ஒரு அங்கமாகவுள்ள பொதுத் திட்டமொன்றின் கீழ் செலுத்தப்படும் ஓய்வூதியங்கள் மற்றும் பிற கொடுப்பனவுகள் மீது அந்த அரசில் மாத்திரமே விதிக்கப்பட வேண்டும் வரி.

**உறுப்புரை 19**

அரசாங்க சேவை

1. (அ) தனிப்பட்ட ஆறொருவர் ஒப்பந்த அரசுக்கு, அரசியல் உப பிரிவுக்கு அல்லது உள்ளூர் அதிகாரசபையொன்றுக்கு ஆற்றிய சேவைகள் தொடர்பில் அவ்அரசினால், அரசியல் உப பிரிவினால், உள்ளூர் அதிகார சபையினால் செலுத்தப்படும் ஓய்வூதியம் தவிர்ந்த சம்பளங்கள் மற்றும் அதனையொத்த ஊதியங்கள் மீது அவ் அரசில் மாத்திரமே வரி விதிக்கப்பட முடியும்.

(ஆ) எவ்வாறாயினும், அச்சேவைகள் மற்றைய அரசில் ஆற்றப்பட்டிருப்பின் அந்நபர் -

(i) அவ் ஒப்பந்த அரசின் நாட்டினத்தவராக, அல்லது

(ii) அச்சேவைகளை ஆற்றும் நோக்கத்திற்காக மட்டும் அவ் அரசின் வதியுநராக மாறியிராதவராகவும் இருப்பின்,

அத்தகைய சம்பளங்கள், வேதனங்கள் மற்றும் அதையொத்த ஊதியங்கள் மீது அம்மற்றைய ஒப்பந்த அரசில் மாத்திரம் வரி விதிக்கப்பட வேண்டும்.

2. (அ) ஒப்பந்த அரசொன்றினால் அல்லது அரசியல் உப பிரிவு அல்லது உள்ளூராட்சி நிறுவனம் அல்லது நியதிச் சட்டச் சபையினால் உருவாக்கப்பட்ட நிதிகளிலிருந்து, அவ் ஒப்பந்த அரசுக்கு, உள்ளூராட்சி நிறுவனம் ஒன்றுக்கு அல்லது நியதிச்சட்ட சபையொன்றுக்கு எவரேனும் ஆளொருவர் ஆற்றிய சேவைகள் தொடர்பில் அவ்ஆளுக்குச் செலுத்தப்படும் ஏதேனும் ஓய்வூதியம் மீது அந்த அரசில் மட்டுமே வரி விதிக்கப்படலாம்.

(ஆ) எவ்வாறாயினும், குறித்த ஆள் மற்றைய ஒப்பந்த அரசின் வதியுநராகவும் நாட்டினத்தவராகவும் இருப்பாராயின் அவ் ஓய்வூதியத்தின் மீது மற்றைய ஒப்பந்த அரசில் மாத்திரமே வரி விதிக்கப்பட வேண்டும்.

3. ஒப்பந்த அரசு ஒன்றினால் அல்லது உள்ளூராட்சி நிறுவனம் ஒன்றினால் நடாத்தப்படும் தொழில் முயற்சியொன்று தொடர்பில் ஆற்றப்பட்ட சேவைகளுக்கான சம்பளங்கள், வேதனங்கள் மற்றும் அவற்றையொத்த வேறு ஊதியங்கள் மற்றும் ஓய்வூதியங்கள் தொடர்பில் 15, 16, 17, 18 ஆம் உறுப்புரைகளின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகுதல் வேண்டும்.

**உறுப்புரை 20**

பேராசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள்

1. மற்றைய ஒப்பந்த அரசுக்கு விஜயம் செய்வதற்கு உடன் முந்திய காலத்தில், மற்றைய ஒப்பந்த அரசின் பல்கலைக்கழகமொன்றில், கல்லூரியொன்றில் அல்லது அவற்றையொத்த அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் கற்பிக்கும் அல்லது ஆராய்ச்சியில் ஈடுபடும் நோக்கில் அல்லது அவ்விரு நோக்கங்களுக்குமாக ஒப்பந்த அரசு ஒன்றில் வதியும் அல்லது வதிந்த பேராசிரியர் ஒருவர் அல்லது ஆசிரியர் ஒருவர் அல்லது ஆராய்ச்சியாளர் ஒருவர் அத்தகைய கற்பித்தல் அல்லது ஆராய்ச்சி தொடர்பில்பெற்ற ஊதியத்திற்கு, அம்மற்றைய அரசுக்கு அவர் வருகை தந்த தினத்திலிருந்து மூன்று வருடங்களை விஞ்சாத ஒரு காலப்பகுதிக்கு அம்மற்றைய ஒப்பந்த அரசில் வரிவிலக்களிக்கப்பட வேண்டும்.

2. எவரேனும் ஆளொருவர் மேற்கொள்ளும் ஆய்வு, அடிப்படையில் வேறு தனிப்பட்ட ஆளொருவரின் அல்லது ஆட்களின் நலனுக்காகவன்றி பொது நலனுக்காக மேற்கொள்ளப்படுமாயின் மாத்திரமே அத்தகைய ஆய்வுகளிலிருந்து கிடைக்கும் வருமானம் தொடர்பில் இவ் உறுப்புரையின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகும்.

**உறுப்புரை 21**

மாணவர்கள் மற்றும் பயிலுநர்கள்

1. ஒப்பந்த அரசொன்றுக்கு வருவதற்கு உடன் முந்தி மற்றைய ஒப்பந்த நாட்டில் வதியும் அல்லது வதிந்த அத்துடன் தனது கல்வி அல்லது பயிற்சிக்காக மட்டும் மேற்கூறிய ஒப்பந்த அரசில் இருக்கின்ற மாணவரொருவர், பயிலுநர் ஒருவர் அல்லது தொழில் பயிலுநர் ஒருவர் தனது பராமரிப்பு, கல்வி அல்லது பயிற்சி அலுவல்களுக்காக பெறுகின்ற கொடுப்பனவுகள், அவ்வரசிற்குப் புறம்பான மூலங்களில் இருந்து பெறப்படுமாயின் அக்கொடுப்பனவுகளுக்கு முதலில் கூறப்பட்ட அரசில் வரி விலக்களிக்கப்பட வேண்டும்.

2. ஒப்பந்த அரசொன்றின் வதியுநரான ஆளொருவர், மற்றைய ஒப்பந்த அரசின் தற்காலிகமாக வதியுநராகவும் முதலில் குறிப்பிடப்பட்ட அரசின் வதியுநர் ஒருவருடன், சேவை ஒப்பந்தத்தின் கீழ் ஊழியராக அல்லது அத்தகைய வதியுநர் ஒருவருடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துள்ள ஒருவராக இருக்குமிடத்து அல்லது மற்றைய ஒப்பந்த அரசு அல்லது சர்வதேச நிறுவனமொன்று அநுசரணை வழங்கும் நிகழ்ச்சியொன்றில் பங்கேற்பவர்கள்,

(அ) முதலாவது குறிப்பிடப்பட்ட அரசின் வதியுநர் ஒருவருடன் அல்லது அத்தகைய வதியுநர் ஒருவருடன் தொடர்புடையவராக இல்லாத ஆளொருவரிடமிருந்த தொழில்நுட்ப நிபுணத்துவ அல்லது வியாபார அனுபவங்களைப் பெற்றுக் கொள்ளல் ; அல்லது

(ஆ) மற்றைய ஒப்பந்த அரசின் பல்கலைக்கழகமொன்றில் அல்லது வேறு அங்கீகரிக்கப்பட்ட கல்வி பெறுதல், ஆகிய விடயங்களை அடிப்படைக் குறிக்கோளாகக் கொண்டு அதில் பங்கேற்குமிடத்து அத்தகைய தனிப்பட்ட சேவைகள் மூலம் கிடைக்கும் வருமானத்திற்கும் ஒரு வருடத்திற்கு மேற்படாத காலம் மற்றைய அரசாங்கத்தில் வரியிலிருந்து விலக்களிக்கப்பட வேண்டும்.

***உறுப்புரை 22***

வேறு வருமானங்கள்

*1. இவ் ஒப்பந்தத்தின் முற்போந்த உறுப்புரைகளில் குறிப்பிடப்படாத, ஒப்பந்த அரசு ஒன்றின் வதியுநர் ஒருவருக்கு பயனுரிமை அடிப்படையில் சொந்தமான வருமான வகைகள் மீது அவை மற்றைய ஒப்பந்த அரசில் அமைந்துள்ள மூலங்களிலிருந்து எழுவதாயின் மாத்திரமே முதலில் குறிப்பிட்ட அரசில் வரி விதிக்கப்பட முடியும். அத்துடன் அவ்வருமானத்தின் மீது மற்றைய ஒப்பந்த அரசில் வரி விதிக்கப்படவும் முடியும்.*

*2. ஒப்பந்த அரசு ஒன்றில் வதியும் ஆளொருவர், மற்றைய ஒப்பந்த அரசில் அமைந்துள்ள நிரந்தரத் தாபனம் ஒன்றின் ஊடாக வியாபாரம் ஒன்றைக் கொண்டு நடாத்துவாராயின் அல்லது அம் மற்றைய அரசில் சுயாதீனமான தனிப்பட்ட சேவைகளை மேற்கொள்வாராயின் அத்துடன் வருமானம் செலுத்தப்படும் உரிமை அல்லது ஆதனம் மேலே குறிப்பிட்ட நிரந்தரத் தாபனத்துடன் அல்லது நிரந்தர அடிப்படையுடன் தொடர்புடையதாகவும் இருப்பின், இவ் ஒப்பந்தத்தின் உறுப்புரை 6 இன் 2 ஆம் பந்தியில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளவாறு அசையா ஆதனங்களிலிருந்து கிடைக்கும் வருமானங்கள் அல்லாத வருமானங்கள் மீது இவ் உறுப்புரையின் 1 ஆம் பந்தியில் உள்ள ஏற்பாடுகள் பொருந்தமாட்டா. அவ்வாறான சந்தர்ப்பங்களில் உறுப்புரை 7 இன் அல்லது உறுப்புரை 14 இன் ஏற்பாடுகள் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு ஏற்புடையதாகுதல் வேண்டும்.*

*3. வருமானம் செலுத்தப்படும் உரிமைகளை ஏற்படுத்துவதன் ஊடாக அல்லது பொறுப்பளிப்பதன் இவ் உறுப்புரையின் பயன்களைப் பெறுவது, அவ்வாறு ஏற்படுத்துதலுடன் அல்லது ஒப்படைப்பதுடன் தொடர்புடைய எவரேனும் ஆளொருவரின் பிரதான குறிக்கோளாக அல்லது பிரதான குறிக்கோள்களில் ஒன்றாக இருப்பின் அத்தகைய சந்தர்ப்பங்கள் தொடர்பில் இவ் உறுப்புரையின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகமாட்டா.*

***உறுப்புரை 23***

இரட்டை வரி விதிப்பனவினை நீக்குதல்

*1. பலஸ்தீனில் வதியும் ஒருவர் இலங்கையிலிருந்து பெறும் வருமானத்தின் மீது இந்த உடன்படிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக இலங்கையில் வரிவிதிக்கப்பட முடியும். அத்துடன் அவ்வருமானத்தின் மீது இலங்கையில் செலுத்த வேண்டிய வரியின் அளவு, அவ்வதிபவருக்கு அவ்வருமானத்தின் மீது பலஸ்தீனில் விதிக்கப்படும் வரி தொகைக்கான வரி வரவாக இடமளித்தல் வேண்டும். எனினும் வரி வரவு அவ்வருமானத்தின் மீது விதிக்கப்பட முடியுமான பலஸ்தீன வரிப் பகுதியினை விஞ்சக் கூடாது.*

*2. இலங்கையின் வதியுநர் ஒருவர் பலஸ்தீனில் பெறும் வருமானத்தின் மீது இந்த உடன்படிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக பலஸ்தீனில் வரிவிதிக்கப்பட முடியும். அத்துடன் அவ்வருமானத்தின் மீது பலஸ்தீனில் செலுத்த வேண்டிய வரியின் அளவு, அவ்வதிபவருக்கு அவ்வருமானத்தின் மீது இலங்கையில் விதிக்கப்படும் வரி தொகைக்கான வரி வரவாக இடமளித்தல் வேண்டும். எனினும் வரி வரவு அவ்வருமானத்தின் மீது விதிக்கப்பட முடியுமான இலங்கை வரிப் பகுதியினை விஞ்சக் கூடாது.*

*3. இவ் ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க ஒப்பந்த அரசு ஒன்றின் வதியுநர் ஒருவர் உழைக்கும் வருமானத்திற்கும் அவ் அரசில் வரி விலக்களிக்கப்படுமாயின், அவ் அரசு, அத்தகைய வதியுநரின் மீது வருமானத்தின் மீதான வரியைக் கணிப்பிடும்போது அவ்வாறு விடுவிக்கப்பட்ட வருமானத்தைக் கவனத்திற் கொள்ளல் வேண்டும்.*

***உறுப்புரை 24***

பாகுபாடு காட்டாமை

*1. ஒப்பந்த அரசொன்றின் நாட்டினத்தவர்கள் மீது மற்றைய ஒப்பந்த அரசில், குறிப்பாக வதிவிடம் தொடர்பில், அவ் அரசின் அவர்களையொத்த அந்தஸ்தில் உள்ள நாட்டினத்தவர்களை விட வித்தியாசமான அல்லது மிகவும் கடினமான எந்தவொரு வரியையும் அறவிடவோ அல்லது அதனுடன் தொடர்புடைய வகையில் எந்தவொரு தேவைப்பாட்டுக்கும் உட்படுத்தப்படவோ கூடாது. (1 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளைக் கவனத்தில் கொள்ளாது ஒப்பந்த அரசுகளில் ஒன்றில் அல்லது இரண்டிலும் வதியுநராக இல்லாத ஆட்களுக்கு இவ் ஏற்பாடுகள் ஏற்புடையதாகுதல் வேண்டும்.)*

*2. ஒப்பந்த அரசொன்றின் தொழில் முயற்சியொன்றுக்குச் சொந்தமான மற்றைய அரசில் உள்ள நிரந்தரத் தாபனத்தின் மீது, அச்செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற மற்றைய அரசின் தொழில்முயற்சியொன்று தொடர்பில் அறவிடப்படும் வரிகளை விடக் குறைந்த அநுகூலங்கள் கிடைக்கக் கூடியவாறு அம்மற்றைய அரசில் வரி அறவிடக்கூடாது. ஒப்பந்த அரசொன்று தனது வதியுநர்களுக்கு சிவில் நிலைமைகளை அல்லது குடும்ப பொறுப்புக்களை அடிப்படையாகக் கொண்டு வரிநோக்கங்களுக்காக வழங்குகின்ற தனிப்பட்ட கொடுப்பனவுகள், நிவாரணங்கள், கழிப்பனவுகள், என்பவற்றை மற்றைய ஒப்பந்த அரசின் வதியுநர்களுக்கும் வழங்கும் கடப்பாட்டினை இவ் ஏற்பாடு ஏற்படுத்துவதாகக் கொள்ளப்படக்கூடாது.*

*3. ஒப்பந்த அரசொன்றின் தொழில் முயற்சிகளின் மூலதனத்தை முழுமையாகவோ அல்லது அதன் பகுதியையோ மற்றைய ஒப்பந்த அரசின் வதியுநர் ஒருவர் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வதியுநர்கள் நேரடியாக அல்லது மறைமுகமாகச் சொந்தமாக வைத்திருக்குமிடத்து அல்லது நிர்வகிக்குமிடத்து முதலில் குறிப்பிடப்பட்டட அரசில் அத்தகைய தொழில்முயற்சிகள் மீது விதிக்கப்படும் அல்லது விதிக்கப்பட முடியுமான வரிகளை விட அல்லது அவற்றுடன் தொடர்புடைய தேவைப்பாடுகளை விட வித்தியாசமான அல்லது தாங்கிக் கொள்வதற்கு மிகவும் கஷ்டமான எந்தவொரு வரியையும் அல்லது அதனுடன் தொடர்புடைய வேறு தேவைப்பாடுகளை முதலில் குறிப்பிட்ட அரசில் விதிக்கக் கூடாது.*

*4. இவ் ஒப்பந்தத்தில் "வரிவிதித்தல்" என்ற வாசகம் இவ் ஒப்பந்தத்தின் அடங்குகின்ற வரிகளை குறிக்கும்.*

**உறுப்புரை 25**

பரஸ்பர உடன்பாட்டு நடைமுறை

1. ஒப்பந்த அரசுகளில் ஒன்றின் அல்லது இரண்டினதும் செயற்பாடுகளின் விளைவாக இவ் ஒப்பந்த ஏற்பாடுகளுக்கு மாற்றமான முறையில் தன்மீது வரிவிதிக்கப்படுவதாக அல்லது அவ்வாறு விதிக்கப்பட்டுள்ளதாக ஒப்பந்த அரசு ஒன்றின் வதியுநர் ஒருவர் கருதுகின்ற சந்தர்ப்பத்தில் அவ் ஒப்பந்த அரசின் உள்நாட்டுச் சட்டத்தின் ஊடாகச் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளைக் கவனத்திற் கொள்ளாது, தான் வதியுநராகவுள்ள அரசின் தகுதிவாய்ந்த அதிகாரியிடம் அல்லது, தன்னுடைய விடயம் உறுப்புரை 24 இன் 1 ஆம் பந்தியின் கீழ் உள்ளடங்குமாயின், தான் நாட்டினத்தவராகவுள்ள அரசின் தகுதிவாய்ந்த அதிகாரியிடம் விளக்கங்களைச் சமர்ப்பிக்க முடியும். இவ் ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளுக்கு இணக்கமின்றிய முறையில் வரிவிதிப்பனவு மேற்கொள்ளப்படுவதற்குக் காரணமாக அமைந்த செயற்பாடு தொடர்பில் முதலாவதாக அறிவித்து மூன்று வருட காலத்தினுள் அவ் விளக்கங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

2. அவ் ஆட்சேபனை நியாயமானது எனத் தகுதிவாய்ந்த அதிகாரிக்குத் தெரிய வந்து அவரால் பொருத்தமான தீர்வு ஒன்றை எட்டமுடியாதவிடத்து, இவ் ஒப்பந்தத்துக்கு இணக்கமில்லாத வரிவிதிப்பனவுகளைத் தவிர்க்கும் நோக்கில் மற்றைய ஒப்பந்த அரசின் தகுதிவாய்ந்த அதிகாரியுடன் பரஸ்பர உடன்பாட்டுக்கு வருவதன் மூலம் நிலைமையைத் தீர்த்துக் கொள்ள முயற்சித்தல் வேண்டும்.

3. இவ் ஒப்பந்தத்தினைப் பொருட்கோடல் செய்வது அல்லது ஏற்புடையதாக்குவது தொடர்பில் ஏதேனும் சிரமங்கள் அல்லது சந்தேகங்கள் தோன்றுமாயின் அவற்றை பரஸ்பர உடன்பாட்டின் மூலம் தீர்த்துக்கொள்வதற்கு ஒப்பந்த அரசுகளின் தகுதிவாய்ந்த அதிகாரிகள் முயற்சித்தல் வேண்டும். இவ்ஒப்பந்தத்தில் ஏற்பாடுகள் எதுவும் காணப்படாத சந்தர்ப்பங்களில் இரட்டை வரி விதிப்பினை நீக்குவது தொடர்பில் அவர்கள் கூட்டாகப் பேச்சுவார்த்தை நடாத்துதல் வேண்டும்.

4. முற்போந்த பந்திகளின் பொருள் தொடர்பில் உடன்பாடு ஒன்றை எட்டும் நோக்கத்திற்காக ஒப்பந்த அரசுகளின் தகுதிவாய்ந்த அதிகாரிகள் நேரடியாக ஒருவருக்கொருவர் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ள முடியும். இவ் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள பரஸ்பர உடன்பாட்டு நடைமுறையை நடைமுறைப்படுத்துவதற்காக தகுதிவாய்ந்த அதிகாரிகள் பொருத்தமான இருதரப்பு நடைமுறைகளையும், நிபந்தனைகளையும், முறைகளையும் நுட்பங்களையும் மேம்படுத்திக்கொள்ள முடியும்.

**உறுப்புரை 26**

தகவற் பரிமாற்றம்

1. இவ் ஒப்பந்தத்தின் ஏற்பாடுகள் மற்றும் ஒப்பந்தத்தில் கீழ் உள்ளடக்கப்படும் வரிகளுடன் தொடர்புடைய வகையில் ஒப்பந்த அரசுகளில் காணப்படும் சட்டங்கள், அச்சட்டத்தின் கீழ் செய்யப்படும் வரி விதிப்பனவை இவ் ஒப்பந்தத்திற்கு முரணில்லாதவாறு நடைமுறைப்படுத்துவதாகவும் அவ்வரிகள் தொடர்பான வரி செலுத்தாது தட்டிக்கழிப்பதனைத் தவிர்ப்பதற்காகவுமான தகவல்கள் ஒப்பந்த அரசுகளின் தகவுடைய அதிகாரிகளால் பரஸ்பரம் பரிமாற்றிக்கொள்ளப்பட வேண்டும். தகவல் பரிமாற்றம் 1 ஆம் உறுப்புரையினால் மட்டுப்படுத்தப்பட மாட்டாது. ஒப்பந்த அரசுகள் பரிமாறிக் கொள்ளும் தகவல்களை அவ் அரசின் உள்நாட்டுச் சட்டங்களின் கீழ் பெறப்பட்ட தகவல்களை இரகசியமானவையாகக் கருதுவது போன்று இரகசியமாகக் கருதுதல் வேண்டும். அத்துடன் அத்தகவல்களை இவ் ஒப்பந்தத்துக்குரியதான வரி மதிப்பீடு, சேகரிப்பு, அவ்வரிகளுடன் தொடர்புடைய அமுலாக்கம், அது தொடர்பாக வழக்குத் தொடர்தல், அவ்வரிகள் தொடர்பான மேன்முறையீடுகளைத் தீர்மானித்தல் என்பவற்றுடன் தொடர்புடைய ஆட்களுக்கு அல்லது (நீதிமன்றங்கள், நிர்வாக சபைகள் உள்ளிட்ட) அதிகாரிகளுக்கு மாத்திரமே வெளிப்படுத்த வேண்டும். அத்தகைய ஆட்கள் இத்தகவல்களை அத்தகைய நோக்கங்களுக்காக மாத்திரமே பயன்படுத்த வேண்டும். எனினும் பகிரங்க நீதிமன்றச் செயற்பாடுகளின் போதும் நீதிமன்றத் தீர்ப்புகளிலும் அத்தகவல்களை வெளிப்படுத்த முடியும்.

2. இவ்வுறுப்புரிமையின் 1 ஆம் பந்தியின் ஏற்பாடுகள் ஒப்பந்த நாடுகளின் மீது பின்வரும் கடமைப்பாடுகளை விதிக்கின்றதென எச்சந்தர்ப்பத்திலும் கருதுதல் ஆகாது.

(அ) அவ்வொப்பந்த அரசின் அல்லது மற்றைய ஒப்பந்த அரசின் சட்டங்களுக்கும் நிர்வாக முறைக்கும், முரண்பட்ட வகையிலான நிர்வாக நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

(ஆ) அவ்வொப்பந்த அரசின் அல்லது மற்றைய ஒப்பந்த அரசின் சட்டங்களின் கீழ் அல்லது சாதாரண நிர்வாக முறையின் கீழ் பெறமுடியாத ஆவணங்கள் அரச ஆவணங்கள் மற்றும் விபரங்களை வழங்குதல்.

(இ) ஏதாயினும், வணிக, வியாபார, கைத்தொழில், வர்த்தக உயர்தொழில் இரகசியங்களை அல்லது வணிக முறைமை வெளிப்படுத்தும் தகவலை வெளிப்படுத்துவது தொடர்பான அரச கொள்கைகளுக்கு முரணான ஏதேனும் தகவல்களை வழங்கல்.

***உறுப்புரை 27***

*இராசதந்திர முகவர்களும் கொன்சியூலர் உத்தியோகத்தர்களும்*

*இவ்வுடன்படிக்கையின் பகுதியெதுவும் சர்வதேசச் சட்டத்தின் பொது விதிகளின் கீழ் அல்லது விஷேட உடன்படிக்கையின் ஏற்பாடுகளின் கீழ் வழங்கப்பட்டுள்ள இராசதந்திர முகவர்கள், கொன்சியூலர் உத்தியோகத்தர்களின் நிதிச் சலுகைகளைப் பாதிக்கமாட்டாது.*

***உறுப்புரை 28***

*வரி சேகரிப்பதில் ஒத்துழைத்தல்*

*1. வருமானக் கோரிக்கைகளைச் சேகரிப்பதில் ஒப்பந்த அரசுகள் பரஸ்பரம் ஒத்துழைக்க வேண்டும். இவ் உறுப்புரையை ஏற்புடையதாக்கும் முறையினை ஒப்பந்த அரசுகளின் தகுதிவாய்ந்த அதிகாரிகள் பரஸ்பர உடன்பாட்டின் அடிப்படையில் தீர்மானித்துக் கொள்ளல் வேண்டும்.*

*2. இவ் உறுப்புரையில் பயன்படுத்தப்பட்டுள்ள "வருமானக் கோரிக்கைகள்" என்ற வாசகம், ஒப்பந்த அரசு ஒன்றின் அதன் அரசியல் உப பிரிவு ஒன்றின் அல்லது உள்ளூராட்சி நிறுவனம் ஒன்றின் சார்பில் விதிக்கப்பட்டுள்ள எல்லா வகையிலும் வரிகளில் உள்ளடங்கும் பணத்தொகையைக் குறிக்கும். அதன் கீழான வரிவிதிப்பு இவ் ஒப்பந்தத்தில் அல்லது ஒப்பந்த அரச தரப்பாகவுள்ள எந்தவொரு சட்டரீதியான ஆவணத்திற்கும் மேற்குறித்த தொகையுடன் தொடர்புடைய வட்டி நிர்வாகத் தண்டம் சேகரிப்பு அல்லது பிணைச் செலவுகளுக்கு முரணற்றவையாகவும் இருத்தல் வேண்டும்.*

*3. ஒப்பந்த அரசொன்றின் வருமானக் கோரிக்கையொன்றை அவ் ஒப்பந்த அரசின் சட்டங்களின் கீழ் நடைமுறைப்படுத்த முடியுமான சந்தர்ப்பத்திலும் அச்சந்தர்ப்த்தில் அவ்ஒப்பந்த அரசின் சட்டங்களின் கீழ் அவ்வருமான அறவீட்டைத் தவிர்க்க முடியாத ஆளொருவர் அவ் வருமானக் கோரிக்கையைச் செலுத்தவேண்டியுள்ள விடத்து, அவ்வருமானக் கோரிக்கையை அவ் ஒப்பந்த அரசின் தகுதிவாய்ந்த அதிகாரியின் கோரிக்கைக்கு இணங்க மற்றைய ஒப்பந்த அரசின் தகுதிவாய்ந்த அதிகாரி அறவிடும் பணியைப் பொறுப்பேற்றல் வேண்டும். அவ்வருமானக் கோரிக்கையை, மற்றைய ஒப்பந்த அரசின் வருமானக் கோரிக்கையாகக் கருதப்பட்டு தமது அரசில் வரிகளை நடைமுறைப்படுத்துதலுடனும் அறவிடுதலுடனும் தொடர்புடைய அவ் அரசின் சட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க அம்மற்றைய ஒப்பந்த அரசினால் அறவிடப்படுதல் வேண்டும்.*

*4. ஒப்பந்த அரசொன்றின் வருமானக் கோரிக்கையொன்று அவ் ஒப்பந்த அரசின் சட்டங்களின் கீழ் அறவிடப்படுவதை உறுதிப்படுத்தும் நோக்கில் பிணை ஏற்பாடுகளைச் செய்ய முடியுமாகவுள்ள சந்தர்ப்பத்தில், அவ் ஒப்பந்த அரசின் தகுதிவாய்ந்த அதிகாயின் வேண்டுகோளுக்கு இணங்க அவ்வருமானக் கோரிக்கைக்கான பிணை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பணியினை மற்றைய ஒப்பந்த அரசின் தகுதிவாய்ந்த அதிகாரி பொறுப்பேற்றல் வேண்டும். அம்மற்றைய ஒப்பந்த அரசினால் அத்தகைய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில், முதலில் குறிப்பிட்ட ஒப்பந்த அரசின் வருமானக் கோரிக்கையை நடைமுறைப்படுத்த முடியாத அல்லது அவ்வருமானக் கோரிக்கையை அறவிடுவதற்கான உரிமையைக் கொண்டுள்ள ஆளொருவரினால் செலுத்தப்பட வேண்டியதும், அவ்வருமானக் கோரிக்கையை அம் மற்றைய ஒப்பந்த அரசின் வருமானக் கோரிக்கையாகக் கருதி, தனது சட்ட ஏற்பாகளுக்கு இணங்க அவ்வருமானக் கோரிக்கையுடன் தொடர்புடைய வகையில் அம்மற்ற ஒப்பந்த அரசு பிணை ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.*

*5. 3 ஆம் 4 ஆம் பந்திகளின் ஏற்பாடுகளைக் கவனத்திற் கொள்ளாது 3 ஆம் 4 ஆம் பந்திகளின் நோக்கங்களுக்காக ஒப்பந்த அரசொன்றினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வருமானக் கோரிக்கையொன்றை காலவரையறைகளுக்கு உட்படுத்தவோ அல்லது அவ்வருமானக் கோரிக்கையின் தன்மையின் அடிப்படையில் அவ் ஒப்பந்த அரசின் சட்டங்களின் கீழ் வருமானக் கோரிக்கையில் தாக்கம் செலுத்தும் ஏதேனும் முன்னுரிமை வழங்கலை மேற்கொள்ளவோ கூடாது. அத்துடன், 3 ஆம் 4 ஆம் பந்திகளின் நோக்கங்களுக்காக ஒப்பந்த அரசு ஒன்றினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வருமானக் கோரிக்கையொன்றுக்கு மற்றைய ஒப்பந்த அரசின் சட்டங்களின் கீழ் செல்லுபடியாகும் ஏதேனும் முன்னுரிமையொன்றை முதலில் குறிப்பிட்ட ஒப்பந்த அரசில் வழங்கக் கூடாது.*

*6. ஒப்பந்த அரசொன்றின் வருமானக் கோரிக்கையொன்றின் இருப்பு, அல்லது செல்லுபடியாகும் தன்மை அல்லது தொகை தொடர்பான சட்டரீதியான செயற்பாடுகளை மற்றைய ஒப்பந்த அரசின் நீதிமன்றத்தின் அல்லது நிர்வாக சபையின் முன் நிறுத்த வேண்டிய அவசியமில்லை.*

*7. 3 ஆம் 4 ஆம் பந்தியின் கீழ் ஒப்பந்த அரசு ஒன்றினால் கோரப்பட்டதன் பின்னர் மற்றைய ஒப்பந்த அரசு குறித்த வருமானக் கோரிக்கையை அறவிட்டு முதலில் குறிப்பிட்ட ஒப்பந்த அரசில் வரவு வைக்க முன்னர் பின்வரும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் முதலில் குறிப்பிட்ட அரசில் வருமானக் கோரிக்கை முடிவடைய முடியும்.*

*(அ) 3 ஆம் பந்தியின் கீழ் கோரிக்கையொன்று முன்வைக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில், முதலில் குறிப்பிட்ட ஒப்பந்த அரசின் சட்டத்தின் கீழ் செயற்படுத்த முடியுமானவரும் அச்சந்தர்ப்பத்தில் அவ் ஒப்பந்த அரசின் சட்டத்தின் கீழ் அறவீட்டைத் தவிர்க்க முடியுமானவருமான ஆளொருவரினால் செலுத்தப்பட வேண்டியவருமானக் கோரிக்கையொன்று காணப்படுதல் அல்லது ;*

*(ஆ) 4 ஆம் பந்தியின் கீழ் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ள ஒரு சந்தர்ப்பத்தில் அது அறவிடப்படுவதனை உறுதிப்படுத்தும் நோக்கில் அவ் உறுப்பு நாடு அதன் சட்டரீதியான பிணை நடவடிக்கைகளை எடுக்க முடியுமான வருமானக் கோரிக்கையொன்று*

*(இ) இது தொடர்பில் முதலில் குறிப்பிட்ட ஒப்பந்த அரசின் தகுதிவாய்ந்த அதிகாரி மற்றைய ஒப்பந்த அரசின் தகுதிவாய்ந்த அதிகாரிக்கு உரிய முறையில் அறிவித்தல் வேண்டும். மற்றைய ஒப்பந்த அரசின் விருப்பத்தின் அடிப்படையில் முதலில் குறிப்பிட்ட ஒப்பந்த அரசு தனது கோரிக்கையை இடைநிறுத்தவோ அல்லது வாபஸ்பெறவோ வேண்டும்.*

8. இவ் உறுப்புரையின் ஏற்பாடுகள் ஊடாக கீழே தரப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் ஒப்பந்த அரசொன்றின் மீது கடப்பாடுகள் விதியாகும் என எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கருதக் கூடாது.

(அ) அவ் ஒப்பந்த அரசின் அல்லது மற்றைய ஒப்பந்த அரசின் சட்டங்களுக்கும் நிர்வாக நடைமுறைகளுக்கும் மாற்றமான முறைகளைப் பின்பற்றுதல் ;

(ஆ) அரசாங்கக் கொள்கைக்கு மாற்றமான நடவடிக்கைகளை எடுத்தல்;

(இ) மற்றைய ஒப்பந்த அரசு, தேவையைப் பொறுத்து அறவிடுதல் அல்லது பாதுகாத்தல் தொடர்பில் நடைமுறையிலுள்ள சட்டங்களினதும் நிர்வாக முறைகளினதும் கீழ் காணப்படும் நியாயமான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்காத விடத்து ஒத்துழைப்பு வழங்குதல்;

(ஈ) அவ் ஒப்பந்த அரசுக்கான நிர்வாகப் பொறுப்பு மற்றைய ஒப்பந்த அரசில் பயன்களுக்கான தெளிவான விகிதங்களாக இல்லாத சந்தர்ப்பத்தில் ஒத்துழைப்பு வழங்குதல்.

**உறுப்புரை 29**

நடைமுறைப்படுத்தல்

1. இவ் ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தமது சட்டத்தின் ஊடாகத் தேவையான நடைமுறைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக ஒவ்வொரு ஒப்பந்த அரசும் இராஜதந்திர வழிமுறைகளில் மற்றைய அரசுக்கு அறிவிக்க வேண்டும். இவ் அறிவித்தல்களின் பின்னர் செய்யப்படும் அறிவித்ததிலிருந்து இவ் ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டும்.

2. இவ் ஒப்பந்த ஏற்பாடுகள் -

(அ) மூலத்தில் நிறுத்திவைக்கப்பட்ட வரிகளைப் பொருத்தவரையில், ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தும் திகதியின் பின்னர் வரும் பஞ்சாங்க வருடத்தின் ஜனவரி மாதம் 01 ஆந் திகதி அல்லது அதன் பின்னர் எழும் வருமானம் தொடர்பிலும்;

(ஆ) வருமானத்தின் மீதான ஏனைய வரிகளைப் பொருத்தவரையில், ஒப்பந்தம் நடைமுறைக்கு வரும் வருடத்தின் பின்னர் வருகின்ற பஞ்சாங்க வருடத்தில் சனவரி மாதம் 01 ஆந் திகதி அல்லது அதன் பின்னர் ஆரம்பமாகும் ஏதேனும் வரி அறவிடத்தக்க வருடம் தொடர்பிலும்

ஏற்புடையதாகுதல் வேண்டும்.

**உறுப்புரை 30**

முடிவுறுத்தல்

ஏதேனும் ஒரு ஒப்பந்த அரசினால் முடிவுறுத்தப்படும் வரை இவ் ஒப்பந்தம் நடைமுறையில் இருத்தல் வேண்டும். ஒப்பந்தம் நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து ஐந்த வருட காலத்தின் பின்னர் வரும் எந்தவொரு ஒரு பஞ்சாங்க வருடமும் முடிவடைவதற்கு ஆகக் குறைந்தது ஆறு மாதங்களுக்கு அல்லது அதற்கு முன்னர் இராஜதந்திர வழிமுறைகளில் முடிவுறுத்தல் தொடர்பான அறிவித்தல் ஒன்றை வழங்குவதன் ஊடாக ஏதேனும் ஒரு ஒப்பந்த அரசு இவ் ஒப்பந்தத்தை முடிவுறுத்த முடியும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் இவ்வொப்பந்தம் பின்வருவனவற்றின் மீது கொண்டிருக்கும் தாக்கம் முடிவுறுத்தப்படும்.

(i) இவ் ஒப்பந்தத்தை முடிவுறுத்துவது தொடர்பான அறிவித்தல் வழங்கப்பட்ட பஞ்சாங்க வருடத்தை அடுத்து வரும் பஞ்சாங்க வருடத்தின் சனவரி மாதம் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் எழும் வருமான மூலத்தில் நிறுத்திவைத்தல் வரி தொடர்பிலும்;

(ii) இவ் அறிவித்தல் வழங்கப்பட்ட பஞ்சாங்க வருடத்தை அடுத்து வரும் வருடத்தின் சனவரி மாதம் 1 ஆம் திகதி அல்லது அதன் பின்னர் ஆரம்பிக்கும் வரிவிதிப்பாண்டில் ஈட்டப்பட்ட வருமானத்தின் மீதான மற்றைய வரிகள் மற்றும் மூலதனத்தின் மீதான வரிகள் தொடர்பிலும்,

இவ் ஒப்பந்தத்தின் ஏற்புடைமை முடிவுறுத்தப்படும்.

இதற்கு சாட்சியாக உரியவாறு அதிகாரம் ஒப்படைக்கப்பெற்ற இங்கு கீழே கையொப்பமிடுபவர்கள் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

ஒரே சமமான அதிகாரங்களைக் கொண்ட சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் இரு பிரதிகளுடன் 2012 ஏப்பிறல் 16ஆம் திகதி கொழும்பில் கைச்சாத்திடப்பட்டது. பொருட்கோடலில் முரண்பாடுகள் ஏற்படுமிடத்து ஆங்கிலப் பிரதி மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ்
இலங்கைச் சனநாயக சோசலிசக்
குடியரசு அரசாங்கத்தின் சார்பில்.

கலாநிதி ரிஆத் மல்கி,
பலஸ்தீன் அரசின் சார்பில்.

12- 506

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.